வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk மலர் : 03 21.10.2022 வெள்ளிக்கிழமை இதழ் : 316 பக்கங்கள் : 16

## 13.5 மில்லியன் டொலர்கள் ஆசிய வங்கி வழங்குகிறது

கொழும்பு, ஒக். 21

ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 13.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெறுவதற்கு நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு ஒப்பந்தம் செய்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி நாட்டின் மூலதனத் தேவை

15

## தேர்தலை பிற்போடுவதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தன!

கொழும்பு, ஒக். 21

உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்துக்கு எதிராக ஒன்றிணைந்த பிரகடனத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை நேற்று பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இதில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, ஜனநாயக இடது

15

## பிரிட்டன் பிரதமர் பதவி விலகினார்!

### 45 நாட்களே பதவியில் நீடிப்பு



லண்டன், ஒக். 21

பிரிட்டன் பிரதமர் லிஸ் ட்ரஸ் நேற்று வியாழக்கிழமை தனது பதவியை இராஜிநாமா செய்தார். வெறும் 45 நாட்களே அவர் பதவியில் இருந்துள்ளார்.

வரவு - செலவு திட்டத்தில் செல்வந்தர்களுக்கு வரி இரத்து செய்த

15

# புதிய அரசமைப்பு உருவாக்கம் இந்தியாவின் உதவி அவசியம்!

### விக்னேஸ்வரன் எம். பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக்ரோபர் 21

**கூட்டு ஆட்சி முறைமையே இந்த நாட்டுக்கு சிறப்பானதாக இருக்கும் என்பது எனது கருத்து. தற்போதைய அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்பு சட்டத்தை கொண்டு வருவது, பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக்கூட தமிழர்களுக்கு இல்லாமல் செய்ய முடியும்.**

எனவே, இலங்கைக்கான புதிய அரசமைப்பு உருவாக்கத்தில், இந்தியாவின் உதவியைப் பெறுவது இலங்கையில் உள்ள இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்துக்கு சிறந்ததாக இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின்

15

## 22ஆவது திருத்தச் சட்டம் மக்களை ஏமாற்றும் செயல்!

### சுமந்திரன் எம். பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 21

அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்ட மூலமானது மக்களை முற்று முழுதாக ஏமாற்றும் நடவடிக்கையாகும் - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

22ஆவது திருத்தச் சட்டம் குறித்து நேற்று பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தில் உரையாற்

15

## 25ஆம் திகதி விடுமுறை!

கொழும்பு, ஒக். 21

அனைத்து தமிழ் மொழி பாடசாலைகளுக்கும் எதிர்வரும் 25ஆம் திகதி - செவ்வாய்க் கிழமை விடுமுறை

15

## சிறுபான்மையினர் பிரச்னை தீர்வு; 13ஆம் திருத்தத்தை அமுலாக்குக!

### இராதாகிருஷ்ணன் எம். பி.



கொழும்பு, ஒக். 21

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருந்தாலும்கூட, 13ஆம் திருத்தம் அமுலாக்கப்பட்டு, அதிகார பகிர்வு ஏற்படுத்தப்படவேண்டும். இதன் மூலமே சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு சந்தர்ப்பம் அமையும். அத்துடன், அரசமைப்புப் பேரவையில் மலையகத் தமிழர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்று வே. இராதாகிருஷ்

15

## திருத்தங்கள் ஒருபோதும் இந்த நாட்டை திருத்தாது!

### சபையில் சிறீதரன் எம். பி.

கொழும்பு, ஒக். 21

"மக்கள் மனங்களை வென்ற புதிய யாப்பை உருவாக்காத வரை திருத்தங்கள் ஒருபோதும் இந்த நாடு திருத்தாது. குருந்தூர்மலை, வெடுக்கு நாறிமலை, நாவற்குழி, மயிலிட்டி என்று சிங்களவர்களின் காலடித் தடங்களே படாத இடங்களில் எல்லாம் எதற்காக விகாரை அமைக்கின்றீர்கள்?" இவ்வாறு கேள்வி எழுப்பி

15

## கோழி இறைச்சி ரூ. 420 குறைந்தது

கொழும்பு, ஒக். 21

ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையைக் குறைக்க கோழிப் பண்ணை வியாபாரிகள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி 1500 ரூபாயாக இருந்த ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1080 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலை நேற்று முதல் நடைமுறைக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது. (ஐ)

## பெருந்தோட்டத்தில் பட்டினிசாவு நிகழமுன் நடவடிக்கை எடுங்கள்!

### மனோ கணேசன் வேண்டுகோள்



கொழும்பு, ஒக். 21

இந்தியா, ஐ. நா. உட்பட உலகத்துடன் சேர்ந்து பெருந்தோட்டங்களில் பட்டினிச் சாவு நடக்க முன் நடவடிக்கை எடுங்கள் என்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தைக் கோரினார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இந்த வலியுறுத்

15

### காமினி விவகாரத்தால்

## சிறீதரன் - மயந்த சபையில் வாதம்!

கொழும்பு, ஒக். 21

காமினி திஸநாயக்கவும் இனவாதி என்று சிறீதரன் எம். பி. கூறியதை அடுத்து, அவருக்கும் - சபைக்கு தலைமை வகித்த காமினி திஸநாயக்கவின் புதல்வரான மயந்த திஸநாயக்கவுக்கும் இடையே கடும்விவாதம் ஏற்பட்டது.

நேற்றைய தினம் 22ஆவது திருத்தச் சட்டம்மீதான விவாதம் நடந்தது. இதன்போது சிறீதரன் எம். பி. உரையாற்றினார்.

அவர் தனது உரையில், சிங்கள தலைவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப வரலாற்றில் அரசமைப்பில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்

15

## இப்படியும் நடக்கிறது...!

ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் பற்றி கடந்த வாரமும் இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம். அண்மையில், புதுடில்லி சென்றிருந்த அந்தக் கட்சியின் ஐவர் அணியினர் புதுடில்லியில், லண்டனில் இயங்கும் 'சிறுதுளி' என்ற அரச சார்பற்ற நிறுவனம் (இதற்கு முன்னர் எங்கும் அதுபற்றி அறிந்ததாக ஞாபகத்தில் இல்லை) அங்குள்ள சிறிய பத்திரிகையான 'சஞ்சார் ரைம்ஸ்' என்ற பத்திரிகையுடன் இணைந்து நடத்திய கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொண்டிருந்தனர்.

அந்தக் கருத்தரங்கில் வைத்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவும் இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்திருந்ததை 'ஈழநாடு' ஏற்கனவே செய்தியாகவும் தந்திருந்தது.

இப்போது தாயகம் திரும்பியுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இந்த ஐவர் சார்பிலும் அதன் பேச்சாளர் துளசி யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் பலருக்கும் அதிர்ச்சியைத் தந்திருக்கலாம்.

விடுதலைப் புலிகள் இயக்கம், இன்றும் கூட உலகின் பல நாடுகளில் தடை செய்யப்பட்ட இயக்கம்தான். விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தாம் முற்றாக அழித்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்து விட்டபோதிலும் அந்த இயக்கத்தை இன்றும் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே இலங்கை வைத்திருக்கின்றது. இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகின்றபோதிலும் இது மௌனிக்கப்பட்டதாகவே தமிழ் மக்கள் இன்றும் உணர்கின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இயங்கு நிலையில் இருந்தபோது புலம்பெயர் தேசம் எங்கும் இயங்கிய அதன் கிளை நிறுவனங்களும் அலுவலகங்களும் இன்றும் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இதனால்தான் இன்றும் அந்த இயக்கம் பல நாடுகளில் தடை செய்யப்பட்ட இயக்கமாகவே இருந்து வருகின்றது.

இந்நிலையிலேயே, புதுடில்லியிலிருந்து திரும்பியுள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தாங்கள் புதுடில்லியில் வைத்து பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரிடம் புலிகள் இயக்கத்தின்மீதான தடையை இந்திய அரசாங்கம் நீக்கவேண்டும் என்று கோரிக்கை வைத்ததாகத் தெரிவித்திருக்கின்றனர்.

யார் அந்த முக்கிய தலைவர் என்பதை அவர்கள் தெரிவிக்காவிட்டாலும் அது அமித்ஷாவோ அல்லது அதன் தேசியத் தலைவர் நட்டாவாகவோ இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால், அவர்கள் அதற்காக தெரிவித்திருக்கின்ற விடயம்தான் இங்கே கவனிக்க வேண்டியது.

அதாவது விடுதலைப் புலிகள் இயக்கம் இப்போது தேர்தல் ஜனநாயக முறையை ஏற்று அரசியலுக்கு வந்திருப்பதால் அந்த இயக்கத்தின்மீதான தடையை நீக்கவேண்டும் என்று தாங்கள் கோரிக்கை விடுத்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதன்மூலம் அவர்கள் சொல்ல வருவது என்ன என்பது புரிந்துகொள்ளக் கூடியதே. அதாவது தாங்களே இப்போது உண்மையான உத்தியோகபூர்வமான விடுதலைப் புலிகள் இயக்கம் என்பதையே அவர்கள் இதன்மூலம் சொல்ல வருகின்றனர் என்பது தெரிகின்றது.

அப்படியெனில், அவர்கள் இந்தக் கோரிக்கையை முதலில் வைக்கவேண்டிய இடம் புதுடில்லி அல்லவே. முதலில் அவர்கள் இந்தக் கோரிக்கையை வைக்கவேண்டியது இலங்கையிடம் அல்லவா. அல்லது இலங்கை தங்கள் மீதான தடையை நீக்காவிட்டாலும் இயங்குவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள் என்பதால் அது எங்களுக்கு பிரச்னை இல்லை என்று சொல்ல வருகிறார்கள் என்றால் அவர்களைப் பார்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துவரும் குற்றச்சாட்டையும் அவர்கள் சேர்ந்தே ஏற்றுக்கொள்வதாக ஆகிவிடாதா?

அதுசரி, புதுடில்லியில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கில் உரையாற்றிய அதன் தலைவர் கதிர் உரையாற்றிய விடயங்களை காணொலி வடிவில் சமூக வலைத்தளங்களில் காணமுடிந்தது. அந்த உரையில் அல்லவா அவர் இந்த விடயத்தை முதலில் தெரிவித்திருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இருந்தவர்கள் என்று கூறப்படுகின்ற சிலர் யுத்தம் முடிந்த பின்னர் படையினரிடம் சரணடைந்து- அந்தப் படையினரிடமே புனர்வாழ்வும் பெற்ற பின்னர் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். அவர்களில் சிலர், அதாவது அவ்வாறு விடுவிக்கட்டவர்கள் பன்னிரெண்டாயிரம் பேரில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் சேர்ந்து ஜனநாயகப் போராளிகள் கட்சி என்ற பெயரில் இயங்கிவருவது தெரிந்தவைதான்.

ஆனால், அவர்களே உண்மையான விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது இன்றுவரை யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. இவ்வாறு அவர்கள் உரிமை கோருகின்றார்கள் என்றால், இப்போதுதான் அவர்கள்மீது வைக்கப்படும் குற்றச்சாட்டும் வலுவடைகின்றது என்பதை சொல்லாமல் இருக்கமுடியவில்லை.!

- ஊர்க்குருவி

# தொழில்தேடும் இளையோருக்கான மாபெரும் தொழில்சந்தை நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ். மாவட்டத்தில் தொழிலுக்காக காத்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்காக யாழ். மாவட்ட செயலகத்தின் தொழில் நிலையம் 40இற்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து தொழில்சந்தையை நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 - மதியம் 1.30 மணிவரை மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது. இதில், தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், கணக்கியல்துறை, ஹோட்டல் முகாமைத்துவம், காப்புறுதித் துறை, ஆடைத் தொழில்சாலை, பாதுகாப்பு சேவை, தாதியர் வேலை வாய்ப்பு, கணனித்துறை, தொழில்பயிற்சி நெறிகள், சுயதொழில் ஊக்குவிப்பு நிறுவனங்கள் போன்றவை வருகைதரவுள்ளன.

இந்த நிறுவனங்கள் தங்களிடத்தில் நிலவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெற்றிடங்களுக்காக அன்றைய தினமே நேர்முகத் தேர்வுகளை நடத்தவுள்ளன.

இந்த தொழில்சந்தை நிகழ்வில், தொழில் தேடும் இளையோர்கள் தங்கள் தகைமைகளை நிரூபிக்கக்கூடிய ஆவணங்களுடன் கலந்துகொள்வதன் மூலமாக தமக்கு பொருத்தமான தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அரச அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 021 221 9359 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஐ)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தேடப்பட்டவர் கைதானார்!

யாழ்ப்பாணம், ஒக். 21

மல்லாகம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் பிடிவிறாந்து விதிக்கப்பட்டு நீண்ட காலமாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த குருநகரை சேர்ந்த 26 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநகர் ஐந்து மாடி குடியிருப்பு பகுதியில் வைத்து யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட புலனாய்வு பிரிவிருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தலைமறைவாகியிருந்த அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதான நபர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

இதேவேளை, கைதான நபர் கடந்த 2021ஆம் ஆண்டு ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தார். அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டும் உள்ளது. இதற்காக அவருக்கு பிடிவிறாந்து விதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் தலைமறைவாகி இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீட்டில் வடிசாராயம் வடித்தவர் சிக்கினார்!

யாழ்ப்பாணம், ஒக். 21

வீட்டின் சமையல் அறையில் வடி சாராயம் வடித்தவர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 15 லீற்றர் வடி சாராயமும் கைப்பற்றப்பட்டது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செல்வபுரம் பிரதே சத்தை சேர்ந்த 34 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

தெய்வநாயகம் மேனன் தலை மையிலான யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் இவரைக் கைது செய்தனர். கைதானவரிடம் இருந்து 15 லீற்றர் வடிசாராயம் மற்றும் வடிசாராயம் வடிக்க பயன் படுத்திய உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (ஐ)

# போதைப் பொருட்களுடன் இருவர் சிறுப்பிட்டியில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

சிறுப்பிட்டி கலைஒளி பகுதியில் போதை பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். கைதானவர்களிடமிருந்து 99 மில்லி கிராம் ஹெரோயின் போதை பொருள்,1500 மில்லி கிராம் கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 21

20 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் செல்வபுரத்தை சேர்ந்த 22 வயது இளைஞரே கோப்பாய் பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ- 03)

# ஆற்றில் நீராடிய இருவர் மரணம்!

கொழும்பு, ஒக். 21

விளையாட்டுப் பயிற்சி நிறைவடைந்த பின்னர் ஆற்றில் நீராடச் சென்ற மூன்று மாணவர்களை நீரோட்டம் இழுத்துச் சென்ற நிலையில் இருவர் உயிரிழந்தனர். ஒருவர் காப்பாற்றப்பட்டார்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை மலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அம்பலங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஊருவத்த பாலத்தை அண்மித்த ஆற்றிற்கு அருகில் உள்ள முகாத்துவாரம் பகுதியில் நீராடச் சென்றபோது மூவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது இருவர் பிரேதசவாசிகளால் மீட்கப்பட்டு பலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இதில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவ்வாறு உயிரிழந்தவர் 17 வயதுடைய தல்க ஸ்கொட, அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவராவர்.

இந்நிலையில், நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போனவரை தேடும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் காணமல் போன மற்றைய மாணவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

இதன்போது உயிரிழந்தவர் 14 வயதுடைய படபெந்தி முல்ல, அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவராவர்.

சம்பவம் தொடர்பில் அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

ஈழநாடு
Eelanadu
21.10.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 04

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## மந்த நிலையில் தமிழர் அரசியல்?

தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் - ஒரு மந்த நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக போர் முடிவுற்ற பின்னர் மீளவும் பழைய ஜனநாயக வழிமுறைக்கு திரும்பிய தமிழ்த் தேசிய அரசியலானது தற்போது வெறுமனே பாராளுமன்ற கதிரைகளுக்கான அரசியலாக உரு மாறியிருக்கின்றது. இதன் காரணமாக ஒரு சில தனிநபர்களை கூறிவிட்டு அமைதியடைந்துவிட முடியாது. ஓர் அரசியல்போக்கை ஒரு சில தனிநபர்கள் சிதைத்துவிட்டார்கள் என்று கூறுவதானால் அந்தத் தனிநபர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கான பொறுப்பு என்ன என்னும் கேள்வி எழுமல்லாவா?

உதாரணமாக கூட்டமைப்பின் தவறான அணுகுமுறைகளுக்கு ஒரு சில தனிநபர்கள்மீது மட்டும் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அந்தத் தனிநபர்களின் தவறுகளை அனுமதித்துக் கொண்டிருக்கும் - அதனை சரி செய்ய முயற்சிக்காமல் இருக்கும் அனைவரும்தானே பொறுப்பாளிகள். எனவே, தனிநபர்கள்மீதான விமர்சனங்கள் குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் இன்றைய தமிழ்த் தேசிய மந்தநிலை அரசியலுக்கான பொறுப்பை அனைவருமே ஏற்க வேண்டும்.

‘அழுகின்ற பிள்ளைதான் பால் குடிக்கும்’ என்பதுபோல் - தேவையுள்ளவர்கள்தான் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும். ஆனால், கடந்த பதின்மூன்று வருடங்களாக தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதாக கூறிக் கொள்வோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் ஒன்றிணைத்து மேற்கொள்ளவில்லை. தங்களின் இயலாமைக்கான காரணங்களை எவர் மீதாவது சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்வது தொடர்பிலேயே கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். இதன் மூலம் ஒவ்வொருவரும் தங்களின் இயலாமையையே நிரூபித்திருக்கின்றனர்.

வடக்கு - கிழக்கை பொறுத்தவரையில் காணிகளை கையகப்படுத்தும் பிரச்னைகளே அடிப்படையான பிரச்னையாகும். காணிகள் பல வழிகளில் கையப்படுத்தப்படுகின்றன. தொல்பொருள், வனவிலங்கு பாதுகாப்பு, உல்லாசப் பயணத்துறை - எனப் பல வழிகளிலும் காணிகள் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்படுகின்றன. இதனை தடுப்பது தொடர்பில் கொள்கை நிலைப்பட்ட வேலைத்திட்டம் கூட்டமைப்பிடமோ அல்லது கூட்டமைப்பில் தவறு கண்டுபிடிக்கும் கஜேந்திரகுமாரின் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் விக்னேஸ்வரன் தலைமையிலான கூட்டணியினரிடமோ இல்லை. இந்த விடயத்தில் இராஜதந்திரிகள் அனைவரையும் அழைத்து நிலைமைகளை விபரிக்கும் நிகழ்வொன்றை இதுவரையில் தமிழ்த் தேசிய தரப்புக்கள் மேற்கொள்ளவில்லை.

அடுத்தது, மாகாண சபைக்கான தேர்தலை பிற்போட்டுக் கொண்டு ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் அனைத்து விடயங்களையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது. மாகாண சபை தேர்தல்களை வைக்குமாறு இந்தியா கூறுகின்றது - அமெரிக்கா கூறுகின்றது - ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைகளில் வலியுறுத்தப்படுகின்றது. ஆனால், தேவையுள்ள மக்களிடமிருந்து அதற்கான வலுவான குரல்கள் எழவில்லை. மாகாண சபை முறைமையை இல்லாமலாக்க வேண்டுமென்று எண்ணும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை விட்டாலும் மாகாண சபையின் தேவையை உணர்ந்திருப்போர் ஏன் இதுவரையில் ஆக்கபூர்வமான அழுத்தங்களை முன்னெடுக்கவில்லை?

இந்தியா சில விடயங்களை வலியுறுத்தலாம் - அமெரிக்கா சில விடயங்களை வலியுறுத்தலாம் - ஆனால், தேவையுள்ளவர்கள் அதற்காக இயங்காவிட்டால் மற்றவர்களால் எதனையும் செய்ய முடியாது. தமிழ் மக்களுக்காக வேறு எவரும் இயங்க முடியாது. ஒரு விடயத்தை தமிழர் தரப்பு வலியுறுத்துகின்றபோது, அதிலுள்ள நியாயத்துக்காக மற்றவர்கள் உதவ முடியும். ஆனால், தேவையுள்ளவர்கள் அமைதியாக தங்களின் நாற்காலி கனவில் மட்டும் இருக்கும்போது - இந்தியாவும் அமெரிக்காவும், ஐ. நாவும் என்ன செய்துவிட முடியும்?

கடந்த பன்னிரெண்டு வருடங்களாக எந்தவோர் ஆக்கபூர்வமான விடயங்களும் இடம்பெறாமைக்கான காரணத்தை தமிழ்த் தேசிய கட்சிகள் தங்களின் இயலாமையிலிருந்தே தேட வேண்டும். தமிழ்த் தேசிய தரப்புக்களின் இயலாமைதான் மறுபுறம் அரச ஆதரவு தமிழ் கட்சிகளின் வெற்றியாக இருக்கின்றது. இந்த நிலைமை மேலும் அதிகரிக்கலாம். தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த் தேசியத்தில் பற்றுக் கொண்டிருப்பதாகக் கூறிக் கொள்ளும் சிவில் சமூக குழுக்கள் என்போர் ஒரு விடயத்தை புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, தேர்தலில் அரச ஆதரவு கட்சிகளின் செல்வாக்கு அதிகரிப்பதானது தமிழ்த் தேசிய அரசியலிலிருந்து தமிழ் மக்கள் விலகிச் செல்வதற்கான ஆதாரமாகவே நோக்கப்படும்.

## பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழர் சமூக ஜனநாயக கட்சி போராட்டம்!



*வவுனியா, ஒக். 21*

*பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கவும், நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு தீர்வு காண வலியுறுத்தியும் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியினர் நேற்று முன்தினம் வவுனியாவில் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.*

*வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக, ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.*

*இதன்போது, “அரசே மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை முழுமைப்படுத்து”, “மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்து”, “தோட்ட தொழிலாளர்களின் சம்பளம், நிலம் மற்றும் வீட்டு உரிமையை உறுதி செய்”, “வானத்தில் வட்டமிடும் விலைவாசியை, மக்களுக்கு கிட்டவாக கொண்டு வா”, “வடக்கு - கிழக்கில் மத இனவாத நோக்கிலான தொல்பொருள் தேடுதல்களை உடனடியாக நிறுத்து” போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ)*

## கற்கோவளம் பாடசாலையில் திறன் வகுப்பறை திறக்கப்பட்டது!



*வடமராட்சி ஒக். 21*

*பருத்தித்துறை கற்கோவளம் பாடசாலையில் ஏற்கனவே இருந்த திறன் வகுப்பறையாக மாற்றிய இராணுவத்தின் 551ஆவது படைப்பிரிவினர் நேற்று பாடசாலை சமூகத்திடம் ஒப்படைத்தனர்.*

*கற்கோவளம் பாடசாலை அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்கிலேயே குறித்த வகுப்பறை சிமாட் வகுப்பறையாக மாற்றப்பட்டு படையினரால் கையளிக்கப்பட்டுள்ளது.*

*சமஸ்த லங்கா சசனரக்ஷக பல மண்டலத்தின் பிரதம பதிவாளர், வென் முகுனவெல அனுருத்த தேரரின் நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட இந்த ஸ்மாட் வகுப்பறை திறப்பு விழாவில் 55ஆவது காலாட் படை தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.*

*வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் எஸ். சத்தியபாலன், 551 காலாட்படை படைத் தளபதி, லிரிகேடியர் சிந்திக்க, உட்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ-02)*

## பண்பாட்டு விழா

*யாழ்ப்பாணம், ஒக். 21*


*யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு பேரவை, மாவட்ட செயலகம், வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் மாவட்ட பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.*

*யாழ். மாவட்ட அரச அதிபரும் பண்பாட்டு பேரவை தலைவருமான க. மகேசன் தலைமையில் சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலர் எம். எம். சமன் பந்துலசேன கலந்து கொள்ளவுள்ளார்.*

*சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர் இ. வரதீஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா, சாகித்ய ரத்னா ஐ. சாந்தன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.*

*இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகள், இளங்கலைஞர், யாழ் முத்து விருதுகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

எதிர்பார்ப்பு நிறைவேறும்.மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் திட்டமிட்டு செயல்படும் காரியத்தில் நினைத்ததை சாதிப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த ஒரு வேலை நடைபெறும்.

**இடபம்**

துணிச்சலாக செயல்பட்டு உங்கள் வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். மதியத்திற்கு மேல் சில சங்கடங்களை சந்திக்க வேண்டி வரும். கவனம் அவசியம்.செயலில் அலட்சியம் வேண்டாம்.

**மிதுனம்**

நேற்றைய எண்ணம் ஒன்று பூர்த்தியாகும். காலையில் முயற்சித்த செயல் திருப்தியளிக்கும்.நன்மை அதிகரிக்கும். எதிர்பார்ப்பு லாபம் தரும். தைரியமாக செயல்படுவீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறும்.

**கடகம்**

காலையில் உங்கள் செயல்கள் இழுபறியானாலும் அதன்பின் பலிதமாகும்.இரண்டு நாட்களாக இருந்த நெருக்கடி விலகும். பொருளாதார நிலை உயரும். செயலில் வெற்றி காண்பீர்கள்.

**சிம்மம்**

பொருளாதார நெருக்கடி விலகும். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும்.செலவுகள் கட்டுக்குள் வரும். உங்கள் எண்ணம் நிறைவேறும். பிரச்னைகளில் இருந்து விடுபடுவீர்கள். நிதிநிலை உயரும்.

**கன்னி**

அலைச்சலுடன் செலவுகளும் அதிகரிக்கும். யோசித்து செயல்படுவது நன்மையாகும். முயற்சிகள் இழுபறியாகும். அரசு வழியில் சங்கடம் தோன்றும். கவனமுடன் செயல்படுங்கள். உறவினர்களால் சங்கடம் ஏற்படும்.

**துலாம்**

எதிர்பார்த்த பணம் இன்று வந்து சேரும். செயல்களில் நன்மையாகும். வியாபாரத்தில் இருந்து வந்த சங்கடங்கள் விலகும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும். முயற்சி நிறைவேறும்.

**விருட்சிகம்**

தொழிலில் ஏற்பட்ட தடை விலகும். குடும்பத்தில் ஒருவர் பாரட்டப்பெறுவார்கள். எதிர்பார்த் தவற்றில் நன்மை அடைவீர்கள்.நினைத்ததை நிறைவேற்றி லாபம் காண்பீர்கள். செல்வாக்கு அதிகரிக்கும்.

**தனுசு**

வருமானத்தில் இருந்த தடை அகலும். காலையில் ஏற்பட்ட குழப்பம் படிப்படியாக சரியாகும். பின்னர் தெளிவுடன் செயல்படுவீர்கள். கவனமுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்ப்புகள் மறையும்.

**மகரம்**

தர்ம சங்கடத்திலிருந்து தப்பிப்பீர்கள்.காலையில் சந்திராஷ்டமம் தொடங்குவதால் செயல்களில் கவனம் தேவை. அலட்சியம் வேண்டாம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். செயல்களில் விழிப்புணர்வு அவசியம்.

**கும்பம்**

துணிச்சலுடன் செயல்பட்டு ஒரு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வருமானம் அதிகரிக்கும்.எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். நீங்கள் மேற்கொள்ளும் செயலால் லாபம் உண்டாகும். விருப்பம் பூர்த்தியாகும்.

**மீனம்**

வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மனதில் புதிய நம்பிக்கை பிறக்கும். குடும்பத்தில் ஒருவரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

# ஹிந்தி திணிப்புக்கு எதிராக மிகப்பெரிய போராட்டம்!

## தமிழர்கள் தயங்கார் என்கிறார் கனிமொழி!

சென்னை, ஒக். 21

ஹிந்தி திணிப்புக்கு எதிராக மிகப்பெரிய போராட்டத்தை நடத்த தமிழர்கள் தயங்கமாட்டார்கள் என்று தி. மு. க. துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம். பி. தெரிவித்துள்ளார்.

சென்னை பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நிகழ்வில் கனிமொழி பேசியதாவது,

இந்த காலகட்டத்தில் பெரியார், அம்பேத்கரை பற்றி தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. பெரியாரின் பெயரை கேட்டாலே பலருக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது. பள்ளிக்கூடங்களில் நாம் எதை தாண்டி வந்துள்ளோம். எத்தகைய போராட்டங்களை கடந்து வந்துள்ளோம் என மாணவர்களுக்கு சொல்லித் தராததால், இடஒதுக்கீடு, சமூக நீதியால் வளர்ந்த மாணவர்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிராக பேசுகின்றனர்.

சமூகநீதி, இடஒதுக்கீடு மூலம் வளர்ந்த சில தலைவர்கள்கூட அதை உணர்வதில்லை. நாட்டில் எத்தனையோ பிரச்னைகள் இருந்தாலும் மீண்டும் ஹிந்தி திணிப்பை முதன்மையாக எதிர்க்கும் நிலையில் உள்ளோம். மொழிக்கான போராட்டம் நீர்த்துபோகவில்லை. மெரினாவில் நடைபெற்ற போராட்டத்தை உலகம் மறந்திருக்காது, மீண்டும் அப்படி ஒரு போராட்டத்தை நடத்தவும் தமிழர்கள் தயங்கமாட்டார்கள். அந்த நிலையை ஏற்படுத்திவிட வேண்டாம் - என்றார்.

(ஐ)

# அன்று சமூகவலைதளம் இருந்திருந்தால் அப்போதே முதலமைச்சர் ஆகியிருப்பேன்!

## சரத்குமார் சொல்கிறார்

சென்னை, ஒக். 21

சமூக வலைதளங்கள் அப்போதே இருந்திருந்தால் நான் முதல்வர் ஆகியிருப்பேன் என அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னை திருவொற்றியூரில் அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி சார்பில் நலிந்தோர்க்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற அக்கட்சி தலைவர் சரத்குமார் பேசியதாவது:

சமத்துவ மக்கள் கட்சியினர் அரசியல் மட்டும் இல்லாமல் ஆன்மிகத்தையும் பேசுகின்றனர். சமத்துவ மக்கள் கட்சி 15 ஆண்டுகளுக்கு மேல் இயங்கி வருவதே பெரிய சாதனைதான்.

அரசியலுக்கு வருவது பணம் சம்பாதிப்பதற்காக அல்ல, மக்களுக்கு சேவை செய்வது என நிர்வாகிகள் உணர வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபட்டு கொண்டு தான் இருக்கிறோம். நாங்கள் தொண்டு, சேவை உதவி செய்து கொண்டிருந்த காலங்களில் செல்போன், வீடியோ கமெரா போன்றவை இருந்து, சமூகவலைதளங்கள் இருந்து இருந்தால் முதல்வராக ஆகியிருப்பேன். இன்னும் 15 நாட்களில் மிக பெரிய அறிவிப்பு வரும். அதனை அறிவிப்பேன் - என்றார்.

இதேவேளை, அவரின் கருத்து சமூகவலைத்தளங்களில் எள்ளிநகையாடப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தி. மு. க. அரசாங்கத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## பா. ஜ. க. அறிவிப்பு

சென்னை, ஒக். 21

தி. மு. க. அரசாங்கத்தைக் கண்டித்து வருகிற 27ஆம் திகதி பா. ஜ. க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அண்ணாமலை அறிவித்துள்ளார்.



ஹிந்தி திணிப்புக்கு எதிராக தமிழக சட்டசபையில், தி. மு. க. அரசு தீர்மானம் நிறைவேற்றி இருந்தது. இந்த நிலையில், தி. மு. க. அரசைக் கண்டிக்கும் வகையில் பா. ஜ. க. சார்பில் வருகிற 27ஆம் திகதி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அந்தக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில், ”தாய் மொழியாம் தமிழுக்கு முடிவுரை எழுத முயற்சிக்கும் திறனற்ற தி. மு. க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் வரும் 27ஆம் திகதி தமிழக பா. ஜ. கவின் சார்பில் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும். தி. மு. கவின் கபட நாடகங்களை மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவோம்! ” என்று குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)



# அரசியலை விட்டு விலக நான் தயார்!

## பன்னீர்செல்வம் அறிவிப்பு

சென்னை, ஒக். 21

நானும் முதல்வர் ஸ்டாலினும் சந்தித்து பேசியதை நிரூபித்தால் அரசியலை விட்டு விலகத் தயார் என்று ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

நான் ஒரு மணி நேரம் முதல்வருடன் பேசினேன் என்று எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டுகிறார். நானும் முதல்வர் ஸ்டாலினும் சந்தித்து பேசியதை நிரூபித்தால் அரசியலை விட்டு விலகத் தயார். நான் முதல்வரை சந்தித்ததாக கூறிவதை நிரூபிக்கத் தவறினால் எடப்பாடி பழனிசாமி அரசியலை விட்டு விலகுவாரா என்று ஓ.பன்னீர் செல்வம் சவால் விடுத்தார்.

ஜெயலலிதா மரணம் தொடர்பான ஆறுமுகசாமி ஆணைய அறிக்கை குறித்து என்னை பற்றி ஏதாவது விமர்சனம் வந்தால் கேளுங்கள் பதில் அளிக்கிறேன் என்று கூறினார்.

நேற்று முன்தினம் பழனிசாமி தரப்பு நடத்திய போராட்டத்தை எனக்கு எதிரான போராட்டமாக கருதவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

# அரசாங்க நிதியை துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு சிக்கல்!

## இழக்கப்பட்ட நிதியை மீண்டும் அறவிடுவதற்கும் சட்ட ரீதியாக தண்டனையை வழங்கவும் பரிந்துரை

கொழும்பு, ஒக். 21

**அரசாங்க நிதியைத் துஷ்பிரயோகம் செய்த அதிகாரிகள், அவ்வாறு துஷ்பிரயோகம் செய்வதற்குத் தீர்மானம் எடுத்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு இழக்கப்பட்ட நிதியை மீண்டும் அறவிட்டுக் கொள்வதற்கும், அவர்களை சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தி தண்டனையைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு அதிகாரங்கள் விஸ்தரிக்கப்படவேண்டும் என இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கம் பரிந்துரைத்துள்ளது.**

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியபோது இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டது.

கூட்டத்தில் கலந்து கொண்ட இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதிநிதிகள் இது பற்றிய கருத்துக்களை முன்வைத்தனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை தொடர்பான திருத்தம், அமைச்சரவை குறித்த திருத்தம், அரசாங்க சேவையை மறுசீரமைப்பது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை இச்சங்கத்தின் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

டிஜிற்றல் மயமாக்கல் மூலம் அரச சேவையை புதுப்பிப்பதற்கு தற்போதுள்ள சட்டத் தடைகளை நீக்குவதற்கு உரிய சட்டத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து உபகுழு விரிவாகக் கலந்துரையாடியதுடன், வினைத்திறனான அரச சேவையை உருவாக்குவதற்கு இது மிகவும் இன்றியமையாத காரணி எனச் சங்கத்தின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அரச சேவையை புதுப்பித்தல் தொடர்பான குறுகிய கால திருத்த முன்மொழிவுகளை இரண்டு வாரங்களுக்குள் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு உபகுழுவின் தலைவர், இலங்கை பொது நிர்வாக சேவைகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

தேசிய பேரவையின் ஊடாக பாராளுமன்றத்தில் திருத்தங்களை சமர்ப்பித்ததன் பின்னர் தேசிய கொள்கையொன்றை விரைவாக தயாரிக்க முடியும் என உபகுழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

தேசிய கொள்கையொன்றில் இருந்து அரச சேவையை சீர்திருத்துவதன் ஊடாக மக்களுக்கு தேவையான சேவைகளை விரைவாகவும் அதிக வினைத்திறனுடனும் வழங்க முடியும் எனவும் நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

# 80 அழகிகளை இலங்கைக்கு கொண்டுவருகிறார் டயானா

கொழும்பு, ஒக். 21

80 நாடுகளைச் சேர்ந்த 80 அழகிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே தெரிவித்தார்.

மிஸ் டூரிசம் வேர்ல்ட் இறுதிப்போட்டி டிசெம்பர் 8 முதல் 21 வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் திருமதி டயானா கமகே தலைமையில் நாட்டின் புகழுக்காகவும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

80 நாடுகளிலிருந்து வரும் அழகிகள் 2 வாரங்கள் நாட்டில் தங்கியிருப்பதுடன் கண்டி, அனுராதபுரம், பொலனறுவை, சிகிரியா, ஹபரணை, எல்ல, அறுகம்பை, மிரிஸ்ஸ உள்ளிட்ட முக்கிய சுற்றுலா இடங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்,

இந்த 80 அழகிகள் இந்த இரண்டு வாரங்களில் இலங்கை முழுவதும் பயணம் செய்யும் போது புகைப்படங்களையும் கருத்துக்களையும் தங்கள் சமூக ஊடகங்களில் பகிர்ந்து கொள்வார்கள். இந்த டிஜிற்றல் யுகத்தில் இலங்கையின் சுற்றுலா சந்தைப்படுத்தலில் இது மிகவும் திறமையான படியாக இருக்கும். இறுதிப் போட்டியில் சிறந்த 5 புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு அதற்கேற்ப பரிசுகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# மூன்று இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 21

சட்டவிரோதமான முறையில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், காரைநகர் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இரவு மீன் பிடித்துக் கொண்டிருந்த வேளையிலேயே கடற்படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதான மீனவர்களையும் அவர்களின் படகையும் மேலதிக நடவடிக்கைக்காகக் கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ)

# திலினி பிரியமாலியுடன் எனக்கு தொடர்பு இல்லை

## கூறுகின்றார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஒக். 21

பல பில்லியன் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியை விடுதலை செய்வதற்காக தான் நடவடிக்கை எடுத்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

திலினி பிரியமாலியை விடுதலை செய்வதற்காக தான் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறியினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு, உண்மைக்கு புறம்பானது எனவும்,



இந்த சம்பவம் தொடர்பில் தான் பாராளுமன்ற சிறப்புரிமை குழுவில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். திலினி பிரியமாலியை விடுதலை செய்வதற்காக தான் பொலிஸாருடன் கலந்துரையாடியதாக, சமிந்த விஜேசிறி முன்வைத்த குற்றச்சாட்டு போலியானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

தானும் தனது குடும்பத்திலுள்ளவர்களும் திலினி பிரியமாலியுடன் எந்தவித கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

# குடிபோதையில் வாகனம் செலுத்தினால் வாழ்நாள் முழுக்க லைசன்ஸ் கிடையாது!

கொழும்பு, ஒக். 21

குடிபோதையில் வாகனம் செலுத்தியதன் மூலம் 36 வயதுடைய பெண்ணொருவருக்கு மரணத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுக்களில் குற்றத்தை ஒப்புக்கொண்ட இளைஞனின் சாரதி அனுமதிப்பத்திரத்தை வாழ்நாள் முழுவதும் இரத்துச் செய்யுமாறு நீர்கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதவான் சம்பிக்க ராஜபக்ஷ முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சந்தேகநபருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 மாதச் சிறைத்தண்டனையும் ஐம்பதாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

உயிரிழந்த பெண்ணின் தாய், தந்தை மற்றும் கணவர் ஆகியோருக்கு 2 இலட்சம் ரூபா நட்டஈடு வழங்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே இவ்வாறு தண்டனை பெற்றுள்ளார்.

(அ)

# போதைப்பொருட்களுடன் மூன்று இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 21

மல்லாகம் பகுதியில் மூன்று இளைஞர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர்.

நல்லூர் மற்றும் கொக்குவில் பகுதிகளை சேர்ந்த 32, 23 மற்றும் 25 வயதுடைய மூவரும் 50, 60 மற்றும் 65 மில்லிகிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

(அ)

# அரசியல்வாதிகளின் தவறுகளுக்கு மக்களும் பொறுப்பேற்கவேண்டும்!

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 21

**அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்பதற்காக புதிய அரசியல்வாதிகளை நியமிக்கவேண்டிய அவசியமில்லை என்றும் மாறாக புதிய சிந்தனையுடைய மக்களை உருவாக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

அரசியல்வாதிகள் இழைக்கும் தவறுகளுக்கு மக்களும் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மாணவர் பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் அறிந்த காலத்திலிருந்து, நாட்டிலிருக்கும் அரசியல் முறை தவறு. அரசியல்வாதிகள் தவறானவர்கள், வாக்குறுதிகளை நிறைவேற்றும் விடயத்தில் தவறிழைக்கிறார்கள் என ஒவ்வொரு தரப்பினரும் தொடர்ந்து வஞ்சித்து வருகிறார்கள்.

ஆனால், தேர்தலினூடாக மக்களே அந்த அரசியல்வாதிகளை தெரிவு செய்கிறார்கள். நாட்டிலுள்ள அரசியல்வாதிகளிடமோ அல்லது நிர்வாக முறையிலோ ஜனநாயக முறை இல்லை அல்லது நாட்டின் அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவில்லை என்றால் அதற்கு



மக்களும் பொறுப்புக் கூற வேண்டும்.

வாக்கெடுப்பு நிலையங்களுக்கு நுழைதல், தாக்குதல் மேற்கொள்ளுதல், வாக்கு மோசடிகள் இடம்பெற்ற யுகமொன்றும் எமது நாட்டில் இருந்தது. அவ்வாறான காலப் பகுதியிருந்தே நாங்கள் வந்தோம்.

வாக்களிக்கும் உரிமையின் பெறுமதி மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயரிடுவதன் பெறுமதி போன்றவற்றை மக்கள் அறிந்திருக்காததால், இது தொடர்பில் மக்களுக்கு கற்றுக் கொடுத்து அவர்களின் நிலப்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய நிலைப்பாடும் இருந்தது.

இருந்தபோதும், நாட்டிலுள்ள அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் புதிய அரசியல்வாதிகளை உருவாக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதை பின்னரே புரிந்துகொண்டோம். அரசியல்வாதிகள் தவறிழைக்கிறார்கள் என்றால் அதற்கு மாற்றீடாக புதிய மக்கள் உருவாக வேண்டும்-என்றார். (அ)

# நூற்றுக்கணக்கான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்

கொழும்பு, 21

550திற்கும் அதிகமான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான மருத்துவர் வாசன் ரத்னசிங்கம் தெரிவிக்கின்றார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தினால் வரி அறவீடுகள் அதிகரித்துள்ளதை அடுத்து, தொழில் வல்லுநர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலையில், இந்த ஆண்டில் 800ற்கும் அதிகமான வைத்தியர்கள் ஓய்வூ பெற காத்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்க நிதி இல்லை!

கொழும்பு, ஒக். 21

சேதனைப்பசளைகளை பயன்படுத்தியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க திறைசேரி இன்னும் நிதியை விடுவிக்கவில்லை என்று விவசாய இராஜாங்க அமைச்சர் நேற்றுமுன்தினம் பாராளுமன்றில் தெரிவித்தார்.

சேதனப் பசளை பாவனையினால் அறுவடை வீழ்ச்சியடைந்த விவசாயிகளுக்கு தேவையான நட்டஈட்டை வழங்குவதற்கு நிதியை திறைசேரிக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரிய தர்ஷன டி சில்வா கூறினார்.

எனினும் நிதி திறைசேரியினால் இன்னும் விடுவிக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இந்த பதிலை வழங்கினார். (அ)

# பெண்களுக்கு தனியான சிறை அறைகள் வேண்டும்

கொழும்பு, ஒக். 21

பெண்களுக்கென தனியான சிறை அறைகள் அமைக்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் கூறினார்.

சிறைகளில் பெண் கைதிகள் தனித்தனியாக தங்க வைக்கப்பட்டிருந்தாலும், பெண்களுக்குத் தனி இடங்களை ஒதுக்குவது முக்கியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் உற்பத்தியான பச்சை அப்பிளின் முதல் அறுவடை ஜனாதிபதியிடம் கையளிப்பு!

கொழும்பு, ஒக். 21

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பச்சை நிற அப்பிள் பழத்தின் முதல் அறுவடை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

எம்.பி. லக்ஷ்மன் குமார எனும் விவசாயியே கல்கமுவ, தம்புத்தேகம பிரதேசத்தில் இரண்டு ஏக்கர் காணியில் இந்த அப்பிள் விளைச்சலை மேற்கொண்டுள்ளார்.

மேற்படி விவசாயிடம் பயிர்ச்செய்கை தொடர்பில் தகவல்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அப்பிள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை நேரில் வந்து பார்ப்பதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

அப்பிள் விதைகளை இந்நாட்டுக்கு எடுத்து வந்து பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னரே பயிர்ச்செய்கையை முன்னெடுத்ததாகவும் இரண்டு ஏக்கரில் அறுவடை கிடைத்திருப்பதாகவும் விவசாயி



லக்ஷ்மன் குமார தெரிவித்தார்.

இந்த விளைச்சலை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து, அவற்றை விநியோகிப்பதற்கு முடியுமென்றும் இலங்கையில் எந்தவொரு இடத்திலும் இதற்கான பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் வகையிலேயே இந்த விதைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயி கையளித்த பச்சை நிற அப்பிளை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அதனை ருசி பார்ப்பதற்கும் மறக்கவில்லை.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாஸ மற்றும் பீ.ஜே. அசங்க லயனல் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

# சீரற்ற காலநிலையினால் 4,900 குடும்பங்கள் பாதிப்பு!

கொழும்பு, ஒக். 21

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் 4,900 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

11 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 19,845 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையுடன் தொடர்புடைய மூன்று மரணங்கள் மற்றும் இரண்டு நபர்களுக்கு காயங்கள் பதிவாகியுள்ளன.

இதற்கிடையில், கடும் மழை, பலத்த காற்று மற்றும் நிலச்சரிவு காரணமாக 8 வீடுகள் அழிந்துள்ளதாகவும், 329 குடியிருப்புகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

மோசமான வானிலையால் பாதிக்கப்பட்ட சுமார் 143 குடும்பங்களும் தற்போது தற்காலிக தங்குமிடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை, நேற்றைய தினத்தை விட இன்றும் நாளையும் மழையுடனான காலநிலை சற்று அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வடக்கு மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 100 மில்லிமீற்றர் அளவில் பலத்த மழை பெய்யக்கூடும்.


பிற்பகல் அல்லது இரவு வேளையில் நாட்டின் மற்ற இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் தென் மாகாணத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். (அ)

# பெரும்பாலான அரசியல்வாதிகள் மோசடியாளர்கள், ஊழல்வாதிகள்!

## அஸ்கிரிய பீடாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 21

**அரசியல்வாதிகள் மற்றும் சிரேஷ்ட அரச அதிகாரிகள் நாட்டுக்கான கடமையை புறக்கணிப்பது குறித்து அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர் கவலை தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கன் எயார்லைன் நிறுவனத்தின் தொழிற்சங்க குழுவொன்றின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது, பெரும்பான்மையான அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகள் ஊழல்வாதிகள் என மகாநாயக்க தேரர் சுட்டிக் காட்டினார்.

மோசமான நிர்வாகம் மற்றும் ஊழல் காரணமாக தேசிய சொத்துக்கள் மற்றும் பொது நிதிகள் ஆபத்தில் உள்ளன என்றும் அவர் கூறினார்.

மல்வத்து பீடத்தின் மகா நாயக்கர் திப்போடுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர், பெரும்பான்மையான அரசியல்வாதிகள் நாட்டை அபிவிருத்தி செய்யாமல் அழிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளனர். மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளே செய்தனர் என தெரிவித்தார்

தேசிய சொத்துக்களைப் பாதுகாப்போம் என்ற வாக்குறுதியின் பேரில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் தனிப்பட்ட ஆதாயங்களுக்காக எதிர்மாறாகச் செய்தன என்றும் அவர் கூறினார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் நஷ்டத்தில் இயங்கும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருமானத்தில் அம்பாந்தோட்டை விமான நிலையம் பராமரிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள் விமான சேவையின் சிக்கலான நிலை மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் குறித்து விளக்கினர். (அ)



# 'பொன்னியின் செல்வன்' படம் பார்த்தார் மஹிந்த!

கொழும்பு, ஒக். 21

அல்லிராஜா சுபாஸ்கரனின் பிரமாண்ட பொருட்செலவில் மிகுந்த எதிர்பார்ப்பிற்கு மத்தியில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'பொன்னியின் செல்வன் - 1' படத்தினை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பார்த்தார்.

கொழும்பில் உள்ள சவோய் திரையரங்கில் தனது பாரியாருடன் இணைந்து நேற்று முன் தினம் இந்த படத்தை அவர் பார்த்தார்.

எழுத்தாளர் கல்கி எழுதிய புகழ்பெற்ற வரலாற்று நாவலை அடிப்படையாகக் கொண்டு இயக்குநர் மணிரத்னம் இயக்கியுள்ள படம் பொன்னியின் செல்வன். இதில் விக்ரம், கார்த்தி, ஜெயம் ரவி, விக்ரம் பிரபு, சரத் குமார், பிரபு, ஜெயராம், ரஹ்மான், ஐஸ்வர்யா ராய், த்ரிஷா, ஐஸ்வர்யா லக்ஷ்மி, அஸ்வின், கிஷோர் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். (அ)

# முதலீட்டாளர்களை கவரும் வகையில் சட்ட முறைமை மாற்றப்படவேண்டும்

## ஜனாதிபதி ரணில் கோரிக்கை



கொழும்பு, ஒக். 21

வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் வகையில் நாட்டின் சட்ட முறைமை மாற்றப்படவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு தனித்துவமான உத்தியோகபூர்வ அதிகார அமைப்பு ஸ்தாபிக்கப்படவேண்டுமெனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# 2023 மார்ச் மாதத்துக்கு முன்னர் பொதுத்தேர்தல் சாத்தியமில்லை

## தேர்தல்கள் ஆணைக்குழு கூறுகிறது

கொழும்பு, ஒக். 21

பொதுத் தேர்தலை எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னதாக நடத்துவது அரசியலமைப்புச் சட்டத்தின் படி சாத்தியமில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கேகாலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா இவ்வாறு தெரிவித்தார்.

பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றால் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எமது அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் மார்ச் மாதம் வரை பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக்கூட கிடையாது என்றும் அவர் கூறினார்.

இல்லையெனில் பெரும்பான்மை வாக்குகளுடன் பாராளுமன்றத்தை கலைக்க கோரிக்கை விடுக்கவேண்டும் என்றும் அந்தக் கோரிக்கையை ஏற்பதா வேண்டாமா என்பது குறித்து ஜனாதிபதியே தீர்மானிக்க முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் அதை ஏற்கவில்லை என்றால், எதுவும் செய்ய முடியாது என்றும் எனவே, இந்த கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு எதிர்காலத்தில் பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலை பழைய வாக்களிப்பு முறையிலேயே நடத்துவதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகளை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவது இன்றியமையாதது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது

## அங்கஜன் எம்.பி சுட்டிக்காட்டு

வடமராட்சி.ஒக்.21

தீபாவளியை முன்னிட்டு நீண்ட காலமாக சிறைகளில் வாடிய தமிழ் அரசியல் கைதிகள் 8 பேரை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்ய தீர்மானித்திருப்பது உறவுகள் மனதில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையையொட்டி ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தனது அறிக்கையில் கடந்த 30ஆண்டு கால உள்நாட்டு யுத்தத்தால் நாட்டு மக்கள் அனுபவித்த இன்னல்கள் ஏராளம். அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் யுத்தம் மௌனித்து பன்னிரெண்டு வருடங்கள் கடந்தும் நிம்மதியாக வாழ முடியாத ஓர் சூழலில் வாழ்கின்றனர்.

முப்பது ஆண்டு கால யுத்தத்தால் ஏராளம் உறவுகளை பறி கொடுத்தும் - பிரிந்தும் வாழ்பவர்கள் தமிழ் உறவுகள்.

காணாமல் ஆக்கப்பட்டோரை தேடியும்-சிறைகளில் வாடுபவர்களை எண்ணியும் எமது உறவுகள் அவர்களின் வாழ்நாளில் பெரும்பகுதியை கழித்து வருகின்றனர்.

மரணத்தின் போது பிள்ளையின் முகம் காணாது எத்தனையோ தாய் - தந்தையர்கள் உயிரை விட்டுள்ளனர். இன்னும் பலர் தமது பிள்ளை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இன்றும் உயிரை கையில் பிடித்து வைத்துள்ளனர்.

இந் நிலையில் ஜனாதிபதி பொது மன்னிப்பு அடிப்படையில் அரசியல் கைதிகளான வரதராஜன், ரகுபதி சர்மா, இலங்கேஷ்வரன், நவதீபன், ராகுலன், காந்தன், சுதா மற்றும் ஜெபநேசன் ஆகிய எட்டு பேரை விடுவிக்கவிருப்பது காத்திருக்கும் உறவுகளுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நல்லாட்சி காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தாங்களும் இணைந்து பல அரசியல் கைதிகளை விடுதலை செய்திருந்தமை அனைவரும் அறிந்த ஒன்றே.

எஞ்சியிருக்கும் அரசியல் கைதிகளையும் சட்டத்தின் ஊடாகவோ அல்லது பொது மன்னிப்பு அடிப்படையிலோ விடுவித்து காத்திருக்கும் உறவுகளின் நம்பிக்கையை நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முதற்கட்டமாக 8 அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு உறவுகள் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்று கூறியுள்ளார். (அ-02)

# நாடு முழுக்க நிரப்பு நிலையங்களில் எரிபொருளின் தரம் குறித்து ஆய்வு

கொழும்பு, ஒக். 21

நாடு முழுவதும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழங்கப்படும் எரிபொருளின் தரம் குறித்து ஆய்வு நடத்தப்பட உள்ளது.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, நுகர்வோர் அதிகார சபை மற்றும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் ஆகியன இணைந்து நாடு முழுவதிலும் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை பரிசோதனைகளுக்குட்படுத்த உள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க கூறியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் விநியோகிக்கும் எரிபொருள்களின் தரம் குறித்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதால் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோலிய பொருட்களில் தண்ணீர், மண்ணெண்ணெய் மற்றும் பிற திரவங்கள் கலக்கப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ஆய்வுகளின் போது எரிபொருள் குழாய்களும் ஆய்வுக்குட்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# இந்து, ஹிந்திதான் இந்தியாவுக்குச் சொந்தமா?



ப.சிதம்பரம்



மத்திய பிரதேச மாநிலத்தின் உஜ்ஜையினி நகரில் உள்ள தொன்மையான மஹாகாலேஸ்வர் ஆலயத்தைப் புதுப்பித்து நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சியில் நரேந்திர மோடி அக்டோபர் 11ஆம் நாள் பங்கேற்றார்.

மோடி, ஆழ்ந்த பக்தி கொண்ட இந்து. இந்தியர்களில் பெரும்பாலானவர்களும் பக்தியுள்ள இந்துக்களே. இந்துக்கள் அல்லாதவர்களில் பெரும்பாலானவர்கள் அவரவர் மதங்களில் ஆழ்ந்த பக்தி கொண்டவர்கள் என்று சொல்லலாம்.

மஹாகாலேஸ்வர் ஆலயத்துக்கு மோடி சென்று பிரார்த்தனையில் பங்கேற்றதுடன் சில சடங்குகளையும் செய்தார். நான் பார்த்தவரைக்கும், எல்லா தொலைக்காட்சி நிறுவனங்களும் அந்த நிகழ்ச்சியை ஒரு நிமிடம் கூட விட்டுவிடாமல் கடமையுணர்வுடன் தொடர்ந்து ஒளிபரப்பின. ஆலய சன்னிதானத்தில் அவருக்கு பொன்னிற அங்கவஸ்திரம் சார்த்தப்பட்டது, காவி நிற வஸ்திரமும் தலையில் அணிவிக்கப்பட்டது.

அரைத்த சந்தனத்தை நெற்றி நிறையப் பூசியிருந்தார், பெரிய குங்குமத் திலகத்தையும் தரித்திருந்தார். அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்தவர்கள் இடையே (கிட்டத்தட்ட அனைவருமே இந்துக்கள் என்று கருதுகிறேன்), நன்றாகத் தயார் செய்திருந்த உரையை நிகழ்த்தினார்.

நாட்டின் வெவ்வேறு மாநிலங்களில் உள்ள தொன்மையான நகரங்களையும் அங்குள்ள பெரிய ஆலயங்களையும் அவர் நினைவுகூர்ந்தார். சம்ஸ்கிருத வேதத்திலிருந்து சில வரிகளையும் மேற்கோள் காட்டினார். சிவ பக்தியின் முக்கியத்துவம் எப்படிப்பட்டது என்பதை விரிவாக விளக்கினார்.

இந்த உரைக்காக உருப்போட்டுவிட்டு வந்தாரா, அல்லது பிறர் கண்ணில்படாமல் அவர் மட்டும் பார்த்துப் பேசும்படியான 'டெலி-பிராம்ப்டர்' வசதியைச் செய்திருந்தார்களா தெரியவில்லை. எதுவாக இருந்தாலும் அது மிகவும் திறமையாக அரங்கேற்றப்பட்ட சொற்பொழிவு நிகழ்ச்சி.

வழக்கமான தொடக்க விழா நிகழ்ச்சிகளுக்கான உரையல்ல அது. இந்து பக்தர்களுக்கிடையே, ஆன்மிக இந்து பிரவசனகர்த்தாக்கள் பேசுவதைப் போன்றதொரு நடை. அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் கூட்டம் வரவேற்று ஆமோதித்தது. இந்தியா இப்போது ஆன்மிகப் பாதையில் பயணிப்பதாகவும், பண்டைய இந்தியாவின் ஆன்மிகப் பெருமையைத் தாங்கள் மீட்டுருவாக்கம் செய்வதாகவும் பேசினார்.

உரையை முடிக்கும்போது, 'ஜெய் ஜெய் மஹாகால்' என்று பல முறை உரத்து சொல்லி முடித்தார். அவர் சொன்ன ஒவ்வொரு முறையும் கூட்டம் உற்சாகம் பொங்க அப்படியே திருப்பிச் சொல்லியது. அவர் சொல்ல வந்த செய்தி தெளிவானது: மோடியின் வரலாற்றுப் பக்கத்தில் இந்தியா என்றால் 'இந்து இந்தியா'. மோடியின் கனவும் 'இந்து இந்தியா' என்பதே!

நிகழ்ச்சியை மோடி தொடங்கியது, பேசியது எல்லாம் சரி - ஆனால், ஒன்று மட்டும் சுருதிபேதமாக நெருடுகிற அளவுக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருந்தது - மோடி தனிநபரல்ல - இந்தியாவின் மாண்புமிகு பிரதமர் - 79.8 வீத ஹிந்துக்கள், 14.2 வீத முஸ்லிம்கள், 2.3 வீத கிறிஸ்தவர்கள், 1.7 வீத சீக்கியர்கள், 2.0 வீத பிற மதத்தவர்களைக் கொண்ட நாடு இது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படி நடக்கக் கட்டுப்பட்டவர், அனைத்து மக்களுக்குமாகப் பேச வேண்டியவர் பிரதமர்.

யார் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்றில்லாமல் அனைத்து மதத்தவராலும் உருவாக்கப்பட்டது நம் நாடு. இதனால்தான் நம்முடைய அரசமைப்புச் சட்டம் 'சமத்துவம்' என்பதை வலியுறுத்துகிறது. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில், 'மதச்சார்பின்மை' என்ற வார்த்தை சேர்க்கப்பட்டு அழுத்தம் தரப்பட்டது. காரணம், நம்முடைய குடியரசை உருவாக்கிய ஆவணத்திலேயே அது 'உள்ளடக்கம்' ஆக இருந்து வருகிறது.

உஜ்ஜையினியில் நிகழ்ந்த தொடக்க விழா நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றது குறித்து எனக்கு மகிழ்ச்சியே!

யார் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்றில்லாமல் அனைத்து மதத்தவராலும் உருவாக்கப்பட்டது நம் நாடு. இதனால்தான் நம்முடைய அரசமைப்புச் சட்டம் 'சமத்துவம்' என்பதை வலியுறுத்துகிறது. நம்முடைய அரசமைப்புச் சட்டத்தில், 'மதச்சார்பின்மை' என்ற வார்த்தை சேர்க்கப்பட்டு அழுத்தம் தரப்பட்டது. காரணம், நம்முடைய குடியரசை உருவாக்கிய ஆவணத்தி லேயே அது 'உள்ளடக்கம்' ஆக இருந்து வருகிறது.

இதேபோல கிறிஸ்தவ தேவாலயம், இஸ்லாமியர்களின் மசூதி போன்றவற்றின் புதுப்பிப்பு - அர்ப்பணிப்பு நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்பதை விரும்புகிறேன். இந்துக்களின் ஆன்மிகப் பயணம் குறித்து மிக விரிவாகப் பேசினார், அதேபோல இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற சமயத்தாரின் ஆன்மிகப் பயணங்கள் குறித்தும் அவர் பேச வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்து மத நம்பிக்கையை நம்முடைய பிரதமர் இப்படிக் கோலாகலமாகக் கொண்டாடிவரும் வேளையில், உள்துறை அமைச்சர் அமித் ஷா இந்தி மொழியைப் பிற மொழிக்காரர்கள் மீது திணிக்கும் வேலையை ஓசையில்லாமல் மேற்கொண்டிருக்கிறார். ஆட்சிமொழிக் குழுவுக்கு உள்துறை அமைச்சர்தான் 'பதவி-வழி' தலைவர்.

அந்தக் குழுவின் 11வது அறிக்கை, குடியரசுத் தலைவருக்கு இந்த ஆண்டு செப்டம்பர் 9ஆம் நாள் அளிக்கப்பட்டிருக்கிறது. அதன் விவரங்கள் வெளியில் தெரியாமல் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. 'தி பிரின்ட்' செய்தி நிறுவனம் அதை அம்பலப்படுத்தும் வரையில் யாருக்கும் தெரியாது. இப்போது வெளியாகியிருக்கும் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் நிச்சயமாக இந்தி பேசாத மாநிலங்களில் பெரிய எதிர்ப்பலைகளை உண்டாக்கும்.

'தி பிரின்ட்' நிறுவனம் வெளியிட்ட அந்த அறிக்கையின்படி, குழுவின் முக்கியப் பரிந்துரைகள் வருமாறு:

கேந்திரிய வித்யாலயங்கள், ஐஐடிக்கள், ஐஐஎம்கள், ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் இந்திதான் கட்டாயப் பயிற்றுமொழி.

**கேள்வி:** இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள கேந்திரிய வித்யாலயங்கள், ஐஐடிக்கள், ஐஐஎம்கள், ஒன்றிய பல்கலைக்கழகங்களிலும் இந்தியே கட்டாயப் பயிற்றுமொழியாக இருக்குமா? இந்தி மட்டுமே ஒரே பயிற்று மொழியாக இருக்குமா, மாற்று பயிற்று மொழியாக இருக்குமா?

அரசு வேலைகளுக்கான ஆள் தேர்வுகளுக்கு ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்தி இனி பயன்படுத்தப்படும்.

**கேள்வி:** இந்தி தெரியாதவர்கள் இதனால் அரசு வேலைக்குத் தேர்வெழுத முடியாமல் தடுக்கப்படமாட்டார்களா?

இந்தியில் அறிக்கைகளையும் ஆவணங்களையும் கோப்புகளையும், வேண்டுமென்றே எழுதாத அதிகாரிகளிடம் அதற்கான விளக்கங்கள் கோரப்படும்.

**கேள்வி:** வங்காளி, ஒடியா அல்லது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அதிகாரிகள் இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக்கொண்டு, அவருடைய அலுவலைச் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுவார்களா?

எங்கெல்லாம் மிகவும் அவசியமோ அங்கு மட்டுமே ஆங்கிலம் பயிற்று மொழியாக தக்கவைத்துக்கொள்ளப்படும், அங்கும் காலப்போக்கில் இந்தி அந்த இடத்தை எடுத்துக்கொள்ளும்.

**கேள்வி:** தங்களுடைய மகன் அல்லது மகள் எந்த மொழியில் படிக்க வேண்டும் - அல்லது தாங்கள் எந்த மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்கோ - மாணவர்களுக்கோ இனி கிடையாதா?

அரசு வேலைகளில் சேர்க்கப்பட இந்தி மொழியறிவு இருப்பது உறுதி செய்யப்படும்.

**கேள்வி:** இந்தியைப் பேசாத ஒருவர் - அவருக்கு இந்தி தெரியாது என்பதால் அரசு வேலை மறுக்கப்படுமா?

விளம்பரங்களுக்காக அரசு ஒதுக்கும் தொகையில் 50 வீதம் இந்திக்கு மட்டும் ஒதுக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** எஞ்சிய 50 வீதம் தொகை மட்டும்தான் ஆங்கிலம் உள்பட பிற மொழிகளுக்கு ஒதுக்கப்படும் என்றால் இந்தி மொழியல்லாத ஊடகங்கள் வருமானம் குன்றி அழிவதை விரைவுபடுத்திவிடாதா?

இந்தியை பிரச்சாரம் செய்வதும் வளர்ப்பதும் அனைத்து மாநிலங்களுக்கும் சட்டப்பூர்வ கடமையாக்கப்படும்.

**கேள்வி:** இந்தியைப் பிரச்சாரம் செய்ய மறுக்கும் மாநில அரசு ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றப்படுமா?

நான் ஓர் அசாமியனாகவோ மலையாளியாகவோ இருந்தால் - அரைக் குடிமகனாகவே என்னை உணர்வேன் முஸ்லிமாகவோ கிறிஸ்தவராகவோ இருந்தால் - நான் குடிமகனே அல்ல என்றே நினைப்பேன்!

# இந்தியாவை நோக்கிச் செல்லுதல்?



யதீந்திரா

இந்தியா ஒரு பிராந்திய சக்தி. ஈழத் தமிழர்களுக்கான உடனடி அயல்நாடு. இது ஒரு மாறாத, ஒரு போதும் மாற்றவே முடியாத பிராந்திய யதார்த்தமாகும். இந்தியா தொடர்பில் இந்தக் கட்டுரையாளர் பல்வேறு சந்தர்பங்களில் எழுதியிருக்கின்றார். ஆனாலும் இந்தியாவை புரிந்து கொள்வதில் எப்போதுமே ஒரு குழப்ப நிலை இருக்கவே செய்கின்றது. இதற்கு என்ன காரணம்? பொதுவாகவே அரசியல் விவகாரங்களை எங்களின் விருப்பு வெறுப்புக்களிலிருந்து நோக்கக் கூடாது. மாறாக, யதார்தத்திலிருந்து நோக்க வேண்டும். குர்திஸ் விடுதலை இயக்கத்தின் தலைவர், அப்துல்லா ஒச்சலான் கூறுவது போன்று, 'நேற்றையவற்றுடன் இன்றையவற்றை ஒப்பிடுவதை விட, அது இன்றெப்படி ஒரு யதார்த்தமாக மாறியுள்ளது என்பதைப் பற்றியே நாம் பேச வேண்டும்' என்பார். சூழ்நிலைகள் மாறுகின்ற போது நமது பார்வைகளும் மாற வேண்டும். அணுகுமுறைகள் மாற வேண்டும். இல்லாவிட்டால், எங்களால் ஒரு போதுமே முன்னோக்கி பயணிக்க முடியாது. யுத்தம் நிறைவுற்று கடந்த பன்னிரெண்டு வருடங்களாக தமிழ் தேசிய அரசியலால் முன்னோக்கி பயணிக்க முடியவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் பிரேரணை கள் பற்றிய விவாதங்கள், அவ்வப்போது கொழும்பிற்கு வந்து செல்லும் மேற்குலக ராஜதந்திரிகளுடனான தேனீர் சந்திப்புக்கள். இப்படித்தான் கடந்த பன்னிரெண்டு வருடங்கள் நகர்ந்திருக்கின்றன.

இந்த பின்புலத்தில்தான் இந்தியாவை நோக்கிச் செல்லுதல் என்னும் கோசம் மெதுவாக மீளவும் எட்டிப் பார்த்தது. மீளவும் செல்லுதல் என்று கூறும் போது, முன்னரும் நாம் சென்றவர்கள் என்பதுதான் அதன் பொருளாகும். இந்தியா ஈழத் தமிழர் சார்பில் இராணுவத் தலையீட்டை செய்த நாடு. தமிழ் மக்களுக்கு அரசியல் பிரச்சினையொன்று இருப்பதை இன்றும் ஏற்றுக் கொண்டிருக்கும் ஒரேயொரு நாடு. இலங்கை தொடர்பான இந்தியாவின் அயலுறவுக் கொள்கையில் தமிழர் விவகாரம் தவிர்க்க முடியாதது. எவ்வாறு அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையில் மனித உரிமை என்பது பிரிக்க முடியாத விவகாரமோ, அவ்வாறுதான் இந்தியாவின் இலங்கை தொடர்பான அணுகுமுறையில் ஈழத் தமிழர் விவகாரமும் தவிர்க்க முடியாததாகும். இந்த அடிப்படையில்தான், இந்தியா தொடர்ந்தும் சில விடயங்களை வலியுறுத்தி வருகின்றது. ஆனால் இதனை சிங்கள தேசியவாத தரப்புக்கள் விரும்பவில்லை. 51வது ஜெனிவா கூட்டத் தொடரின் போது, இந்திய பிரதிநிதி வெளிப்படுத்திய கருத்துக்களை சிங்கள தேசியவாத தரப்புக்கள் கடுமையாக எதிர்க்கின்றன. ஆங்கிலத்தில் எழுதும் சிங்கள அரசியல் ஆய்வாளர் ஒருவர், இந்தியா எதிரியை மீளவும் உறுப்படுத்தியுள்ளதாக எழுதியிருக்கின்றார். தமிழர் விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை, சிங்களவர்களுக்கு எதிரான ஒன்றாகவே, தென்னிலங்கை சிங்கள சக்திகள் நோக்குகின்றன. ஏனெனில், சிங்கள தேசியவாத தரப்புக்களை பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளின் அழிவோடு அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன. ஒரு பிரச்சினை முடிந்துவிட்ட பின்னர், அது பற்றி பேசுவதற்கு எதுவுமில்லை என்பதே பொதுவான சிங்கள உளவியலாக இருக்கின்றது. இந்த நிலையில்தான், இந்தியா தொடர்ந்தும் ஈழத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியான பிரச்சினையொன்று இருப்பதை வலியுறுத்தி வருகின்றது. ஒரு வேளை இந்தியா தமிழர்களின் பிரச்சினையை முற்றிலுமாக கைவிடுமானால், தமிழர் பிரச்சினைக்கான சர்வதேச நியாயம் என்பது முற்றிலும் இல்லாமல் போய்விடும். இதனை தமிழ் தேசியம் பேசுவோர் எந்தளவு புரிந்து வைத்திருக்கின்றனர்?

தமிழ் தேசிய அரசியல் சூழலில் இடம்பெறும் விடயங்களை நோக்கினால் இந்தியா தொடர்பில் குழப்பமான புரிதல்களே பலரிடம் இருப்பதாக தெரிகின்றது. பெரும்பான்மையான பிரிவினர் இந்தியாவின் தவிர்க்கவே முடியாத இடத்தை புரிந்து வைத்திருக்கின்றனர். ஆனால் விடயங்களை எவ்வாறு அணுகுவது என்பதில் அவர்கள் மத்தியில் குழப்பங்கள் உண்டு. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அணுகுமுறைகளை இதற்கான உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இரண்டாவது தரப்பினர் கடந்தகாலத்தை - அதாவது இந்திய அமைதிப் படைகள் வடக்கு கிழக்கில் நிலைகொண்டிருந்த காலத்தில் இடம்பெற்ற விடயங்களை முன்னிலைப் படுத்தி, இந்திய எதிர்ப்பை தமிழ் தேசிய அரசியலில் பாதுகாக்க விருப்பும் தரப்பினர். இன்று தமிழ் சூழலில் இந்திய எதிர்ப்பை முன்னிலைப்படுத்தும் பிரதான தரப்பினராக, கஜேந்திர குமார் தலைமையிலான, அகில இலங்கை தமிழ் காங்கிரசை குறிப்பிடலாம். இந்திய அமைதிப் படைகளின் காலத்தில் இடம்பெற்ற இந்திய இராணுவ அத்து மீறல்களை சுட்டிக்காட்டி, இந்திய இராணுவமும் இனப்படுகொலையில் ஈடுபட்டதான பிரச்சாரங்களை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியினரே முன்னெடுத்து வருகின்றனர். ஒரு புறம் இந்தியாவின் தேசிய பாதுகாப்பில் தாம் கரிசனையாக இருப்பதாக கூறும் கஜேந்திர குமார் பொன்னம்பலமோ - மறுபுறம், இந்திய எதிர்ப்பு அரசியலை தமிழ் தேசியத்திற்குள் பேணிப்பாதுகாக்க முற்படுவதை எவ்வாறு புரிந்துகொள்வது?

தமிழர் பகுதியில், இந்தியா, ஒரு படைத்தளத்தை நிறுவினால் கூட அதில் தங்களுக்கு பிரச்சினையில்லை என்றும் கூட, கஜேந்திரகுமார் ஒரு முறை கூறியிருந்தார். இந்தக் கட்டுரையாளர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தொலைகாட்சி ஒன்றிற்காக மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். ஒரு புறம் தாங்கள் இந்தியாவிற்கு எதிரானவர்கள் அல்ல என்று கூற முற்படும் கஜேந்திரன்களோ, மறுபுறம் இந்தியாவிற்கு எதிரான வெகுசன அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதில் முழுமூச்சாக செயலாற்றுகின்றனர். சில தினங்களுக்கு முன்னர், இந்திய படைகளால் கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதாக கூறிய சிலர், யாழ்ப்பாண பிரம்படியில் ஒன்றுகூடியிருந்தனர். இதிலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அணியோடு இணைந்து செயற்படுபவர்களே தெரிந்தனர். இதன் நோக்கம் என்ன? இந்தியாவும் இனப்படுகொலையில் ஈடுபட்டது என்பதை சொல்லுவதால் யாருக்கு நன்மை கிட்டும்? இதனால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போகும் நன்மை என்ன?

தமிழ் மக்கள் மத்தியில் இந்தியாவிற்கு எதிரான அப்பிராயங்களை பரப்புவது மறுபுறமாக யாருக்கு பயன்படும். அதனை யார் பயன்படுத்திக் கொள்ள முயற்சிப்பார்கள்? நிச்சயமாக சீனாவே இதனை பயன்படுத்திக் கொள்ளும். தமிழ் மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பை விதைக்கும் தரப்பினரும் இருக்கின்றனர் என்பதை சரியாக கணக்கும் போட்டே, சீனா வடக்கு கிழக்கில் ஆர்வம் காண்பித்துவருகின்றது. இந்தக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது, யாழ் பல்கலைக்கழகத்தின் விவகாரம் ஒன்றும் பேசு பொருளாக இருக்கின்றது. யாழ் பல்கலைக்கழகம் சீனாவின் பல்கலைக்கழகம் ஒன்றோடு உடன்பாடு செய்திருக்கின்றது. ஆரம்பத்தில் இதனை செய்யப் போவதில்லையென்று கூறிவந்த யாழ் பல்கலைக்கழக துனை வேந்தர், பின்னர் உடன்பாட்டில் கையெழுத்திட்டிருக்கின்றார். இதிலுள்ள சில பாதகமான விடயங்களை தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் கூட, அவர் எதனையும் கருத்தில் கொள்ளவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், இந்தியாவின் முன்னணி தொழில்நுட்ப பல்கலைக்கழங்களில் ஒன்றும், யாழ் பல்கலைக்கழக்கதோடு இணைந்து செயற்படுவதற்கான முன்மொழிவை முன்வைத்திருக்கின்றது.

இலங்கையின் இரண்டு முன்னணி பல்கலைக்கழங்களோடு இவ்வாறான உடன்பாட்டை செய்துகொள்ளவுள்ளதாக இந்திய தூதரகம் கூறியபோது, இரண்டு தென்பகுதி பல்கலைக்கழகங்களின் பெயர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழு வழங்கியிருக்கின்றது. ஆனால் ஒன்று உங்களுக்கு மற்றையது தமிழ் பகுதிகளில் இருக்கும் பல்கலைக்கழக்கத்திற்கு வழங்கப்பட வேண்டுமென்று இந்தியா குறிப்பிட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் குறித்த வாய்ப்பு யாழ்ப்பாண பல்கலைக்கழக்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் உடன்பாட்டில் உள்ள விடயங்கள் சிக்கலானதென்று கூறி, யாழ் பல்கலைக்கழக துனை வேந்தர் இதனை இழுத்தடிக்க முற்படுவதாக கூறப்படுகின்றது. சீனா விடயத்தை பெரிது படுத்தத் தேவையில்லை. ஏனெனில், உதவி கிடைக்கும் போது எடுத்துக் கொள்வதில் ஏன் தயங்க வேண்டும். ஒரு தரப்பினர் இவ்வாறு கூறுகின்றனர். அதனை இந்தக் கட்டுரையாளர் மறுக்கவில்லை ஆனால் கேள்வி அவ்வாறான உதவி இந்தியாவிடமிருந்து வருகின்ற போது - அதனை ஏன் இழுத்தடிக்க வேண்டும். சீன பல்கலைக் கழகத்தோடு உடன்பாடு செய்ய முடியுமென்றால் - ஏன் இந்திய பல்கலைக்கழக்கதோடு உடன்பாடு செய்வதற்கு தயக்கம் காண்பிக்க வேண்டும்? அவ்வாறாயின் யாழ் பல்கலைக்கழக துனை வேந்தரின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலோடு தொடர்புபட்டதா?

வடக்கு கிழக்கிற்குள் சீனா ஆர்வம் காண்பிப்பது அடிப்படையில் இந்தியாவை சீண்டும் செயற்பாடுகள்தான். சீனா தமிழ் மக்களின் நலன்கள் மீதான அக்கறையிலிருந்து தமிழர் பகுதிக்குள் வரவில்லை. சீனாவுடன் பணியாற்றலாம் என்று கருதுபவர்கள் இதனை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். மேலும் இந்தியாவையும் சீனாவையும் சம தூரத்தில் வைத்து கையாளப் போவதாக எவரேனும் நினைத்தால் அவர்கள் நல்ல மனநல மருத்துவரைத்தான் பார்க்க வேண்டும். ஏனெனில் தமிழ் சமூகம் அவ்வாறான ஆளுமையுள்ள சமூகமல்ல. கையறு நிலையிலிருக்கும் சமூகமொன்று, இருக்கின்ற ஒரளவான நட்பு சக்திகளையும் இழந்துவிடக் கூடாது. இந்த அடிப்படையில் அரசியலை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு வேளை சீனா அதன் அணுகுமுறையை மாற்றிக் கொண்டு, தமிழர்களின் அரசியல் நியாயத்தை ஏற்றுக்கொள்ளுமாக இருந்தால், அதன் பின்னர் இது பற்றி உரையாடலாம்.

இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று ஒரு தரப்பினர் முயற்சிக்கின்ற போது, மறுபுறும் அதன் முக்கியத்துவத்தை மறுதலிக்கும் நோக்கிலான செயற்பாடுகளும், தொடர்கின்றன. இதனைச் சுட்டிக்காட்டும் நோக்கிலேயே சில விடயங்களை இங்கு பகிர்ந்திருந்தேன். இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்பங்களில் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்தியாவை தவிர்த்து செல்ல முடியுமென்பது, வேண்டுமானால் கனவில் சாத்தியப்படலாம். ஒரு போதும் நிஜத்தில் சாத்தியப்படாது. அதே வேளை இந்தியாவை நோக்கிச் செல்ல வேண்டுமென்று சிந்திப்பவர்களும் முதலில் சில அடிப்படைகளை புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். இந்தியாவின் அறிவிக்கப்பட்ட நிலைப்பாடாக ஒன்று இருக்கின்ற போது, அதற்கு மாறான சுலோகங்களோடு இந்தியாவை நோக்கிச் செல்ல முடியாது. செல்லலாம் ஆனால் அதனால் பயனில்லை.

இது தொடர்பில் எனது முன்னைய கட்டுரைகளிலும் குறிப்பிட்டிருக்கின்றேன். இந்தியாவின் தமிழர்கள் தொடர்பான வெளிவிவகார அணுகுமுறையானது, அன்றிலிருந்து இன்றுவரையில் ஒன்றுதான். அதாவது, பிளவுபடாத இலங்கைக்குள் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வொன்றிற்கு தமிழ் மக்கள் உரித்துள்ளவர்கள். அந்தத் தீர்வு இந்தியாவை பொறுத்தவரையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமையை அடிப்படையாகக் கொண்டது. இதனை புதுடில்லியில் மாநாடுகள் நடத்துவதன் மூலம் மாற்றியமைக்காலாம் என்று எவரேனும் நினைத்தால், அது அவர்களது பிரச்சினையாகும். எனவே புதுடில்லியை நோக்கிச் செல்ல வேண்டுமென்று எண்ணுபவர்கள் இந்திய அயலுறவுக் கொள்கையை புரிந்து கொண்டு, இந்தியா எதனை வலியுறுத்தி வருகின்றதோ, அதற்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே இந்தியாவிடம் செல்ல வேண்டும். ஒரு நாட்டின் வெளிவிவகார கொள்கையை பிறிதொருவர் மாற்றியமைக்க முடியாது. பலம்பொருந்திய நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கையானது, உலக அரசியல் மாற்றங்களால் மாற்றமடையுமே தவிர, வேறு எந்தவொரு நகர்வுகளாலும் நாடுகளின் வெளிவிவகார கொள்கை மாறுவதில்லை. வேண்டுமனால், வெளிவிவகார அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.




**இந்தியாவின் தமிழர்கள் தொடர்பான வெளிவிவகார அணுகுமுறையானது, அன்றிலிருந்து இன்றுவரையில் ஒன்றுதான். அதாவது, பிளவுபடாத இலங்கைக்குள் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான அரசியல் தீர்வொன்றிற்கு தமிழ் மக்கள் உரித்துள்ளவர்கள். அந்தத் தீர்வு இந்தியாவை பொறுத்தவரையில், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை முறைமையை அடிப்படையாகக் கொண்டது.**

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | **பொருத்தமான வாக்கியங்கள்** | | | | |

## கல்வி tv CHANNEL-1

**21.10.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**21.10.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# காரைதீவு பிரதேசத்தில் டெங்கு பரவல் தீவிரம்!



அம்பாறை, ஒக். 21

காரைதீவு 12 ஆம் பிரிவில் அண்மைக்காலமாக டெங்கு நோய் மிகவும் தீவிரமாக பரவிவருகிறது.

அதனைத் தொடர்ந்து, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் தஸ்லீமா வசீர் தலைமையில் விசேட டெங்கு தடுப்பு பணிகளும், கிணறுகளில் மீன்கள் விடும் பணிகளும் அதிரடியாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும் ,அலுவலக சுகாதார பணியாளர்கள் வீடுகளில் டெங்கு பரிசோதனை மேற்கொண்டபோது அதிகமான இடங்களில் நுளம்பு குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அங்கு பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இரண்டு நாட்களுக்கு மேல் குடம், வாளி மற்றும் நீல நிற பரல்களில் நீரை சேமித்து வைக்க வேண்டாம்.

ஒவ்வொரு முறையும் நீர் சேமிக்கும் கொள்கலன்களை பூரணமாக கழுவி சுத்தம் செய்த பின்னரே மீண்டும் நீரை சேகரித்தல் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் உங்கள் கிணறு நுளம்பு வலை இடல், நீர் சேமிக்கும் கொள்கலன்கள், மலசலகூட வாளி, சுற்றுப்புறங்களில் நீர் தேங்கும் இடங்களை அவதானியுங்கள். மேலும் அநேக வீடுகளின் வீட்டின் உட்பகுதியில் பின் வரும் இடங்களில் அதிகமான நுளம்பு குடம்பிகள் அவதானிக்கப்பட்டுள்ளன,

1)குளிர்சாதனப் பெட்டியின் பிற்பக்க நீர் தேங்கும் பகுதிகள்.

2)சமையலறையின் சிங் (sink) இன் கீழ்பக்க பகுதிகள்.

3)கூரையிலிருந்து கசிந்து வரும் மழைநீரை சேகரிக்க வைக்கும் பாத்திரங்கள்.

4)குளியலறையில் நீர் சேகரித்துவைக்க பாவிக்கப்படும் வாளிகள்.

5)நீர் தேங்கிநிற்கும் பூச்சாடிகள்.

எனவே மேற்குறிப்பிட்ட இடங்களில் அதிக கவனம் செலுத்தி நுளம்புகள் பெருக இடமளிக்காமல் சுத்தம் செய்துகொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம் என்று கூறப்பட்டது.

சுத்தம் செய்ய தவறும் பட்சத்தில் உரிமையாளருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது

இந்நிகழ்வில் அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்,பொது சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத் தடுப்பு பிரிவினர்கள், காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக நுளம்பு கள தடுப்புப் பிரிவினர்களும், காரைதீவு 12 ஆம் பிரிவு கிராம உத்தியோகத்தர், காரைதீவு பிரதேச சபை ஊழியர்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# தமிழ் பிரதேசங்களில் பொலிஸார் செவ்வனே கடமை செய்வதில்லை!

## கலையரசன் எம்.பி. குற்றச்சாட்டு




அம்பாறை, ஒக். 21

தமிழ் பிரதேசங்களில் பொலிஸார் தமது கடமைகளை செவ்வனே செய்வதில்லை. இலஞ்சம் ஊழலுக்குள் அவர்கள் அகப்பட்டு சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் விடயங்களில் ஒதுங்கி நிற்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று சுவாமி விபுலானந்தா பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதன் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் அதிகமான இராணுவத்தினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் இங்கு வாழும் இளைஞர்களை போதைப்பொருளால் அழிக்கும் முயற்சி திட்டமிட்டுச் செயற்படுத்தப்படுகின்றது.

இதனை நிறுத்தவேண்டிய பொறுப்பு ஆரம்பத்தில் பெற்றோர்களுக்கு இருந்தாலும் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு பொலிசாருக்கு உள்ளது. ஆகவே பொலிசார் பொறுப்புடன் செயற்படவேண்டும்.

இந்த நிலையில் நிலையில்லாமல் இருக்கும் அரசு தங்களது ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என செயற்படுகிறதே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்கும் சில விடயங்களை பேச்சளவில் பேசினாலும் நடைமுறையில் இல்லாத சூழல் உள்ளதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறான சூழலில் ஆலையடிவேம்பு பிரதேச சபை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆட்சியின் கீழ் இல்லாமையும் இங்கு பலவீனமான அரசியல் இடம்பெறுவதற்கு காரணமாகும்.

ஆகவே சமூகத்தின்பால் அக்கறை கொண்ட நல்லதொரு பிரதேச சபையினை எதிர்காலத்தில் உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# உலக நோயாளர் பாதுகாப்பு தினம் கல்முனை வைத்தியசாலையில்




அம்பாறை, ஒக். 21

உலக நோயாளர் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன் தினம் உலக நோயாளர் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதன்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் இந்தவருட நோயாளர்கள் பாதுகாப்பு தினத்தின் குறிக்கோள்களையும் இலக்குகளையும் நோக்காக கொண்டு பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதி வைத்திய அதிகாரிகளான மருத்துவர் ஜே.மதன், மருததுவர் எஸ் .ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். அதனைத் தொடர்ந்து ”மெடிக்கேஷன் சேஃப்டி” என்ற தொனிப் பொருளில் கருத்துரைகளை வைத்திய நிபுணர்களான என். உதயகுமார், எம்.சமீம், முஸ்தபா இக்ரம், எஸ் எம்.ரொசாந்த், எஸ் .எம் .ரசீன் மொஹமட் ஆகியோர் சிறப்புரை வழங்கினார்கள். (அ)

# சண்முகா இந்து மகளிர் கல்லூரி நூற்றாண்டு விழா நடைபவனி





திருமலை, ஒக். 21

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபவனி நிகழ்வு அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜன் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

# அதிபருக்கு பாராட்டு விழா

அம்பாறை, ஒக். 21

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட சொறிக் கல்முனை ஹொலிகுறோஸ் மகா வித்தியாலய அதிபர் அருட் சகோதரி எம் .சிறியபுஷ்பம் ”குரு பிரதீபா ” விருது பெற்றமையை பாராட்டிக் கௌரவிக்கும்

விழா நேற்று முன்தினம் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்டது. முன்னதாக பாராட்டப்பட்ட அதிபரும் , அதிதிகளும் வீதி ஊர்வலமாக பான்ட் வாத்தியம், மயில் நடனம் சகிதம் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கௌரவ அதிதிகளாக வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி நிதர்சினி மகேந்திரகுமார், ஏஎல்.அப்துல்மஜீட், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான கே. ரத்னேஸ்வரன், எஸ். பிரகதீஸ்வரன் ,அதிபர் சங்க பிரதிநிதி கே. செல்வசிகாமணி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ)

# கிண்ணியாவில் மின்னல் தாக்கி இரண்டு பேர் வைத்தியசாலையில்

திருமலை, ஒக். 21

கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உப்பாறு, தாமரைவில் பிரதேசத்தில் மின்னல் தாக்கியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் காயமடைந்து கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

50 வயது பெண் ஒருவரும் அவரது ஐந்து வயது பேரப் பிள்ளையுமே இவ்வாறு மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி உள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கிண்ணியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)


# ஆக்கிரமித்த பிராந்தியங்களில் இராணுவச் சட்டம் நடைமுறை!

## அதிபர் புடின் பிரகடனம் மக்கள் வெளியேற்றம்

மொஸ்கோ, ஒக். 21

ரஷ்யா அண்மையில் தன்னோடு இணைத்துக்கொண்ட உக்ரைனின் நான்கு பிராந்தியங்களிலும் இராணுவச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளது.

கடந்த புதன்கிழமை நாட்டின் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடன் நடத்திய தொலைக்காட்சி உரையாடலின்போது அதிபர் புடின் இதனை அறிவித்துள்ளார். டொனெட்ஸ்க், லுஹான்ஸ்க், கெர்சன் மற்றும் சபோரிஷ்ஷியா ஆகிய நான்கு பிராந்தியங்களிலுமே இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த நான்கு பிராந்தியங்களையும் நேரடியாக மொஸ்கோவின் உத்தரவின் கீழ் இயக்குவதற்காகப் பிரதமர் தலைமையில் இணைப்புச் சபை ஒன்று நிறுவப்பட்டிருப்பதாகவும் புடின் அறிவித்திருக்கிறார்.



முப்படைகள் மற்றும் பொலிஸாருடன் சிவில் அதிகாரிகள் இணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கைத் தலைமையகங்கள் நான்கு பிராந்தியங்களினதும் ஆளுநர்களின் கீழ் இயங்கவுள்ளன.

கைப்பற்றிய இந்தப் பிராந்தியங்களை ரஷ்யா கடந்த மாதம் தன்னோடு இணைத்துக்கொண்ட போதிலும் அங்கு உக்ரைன் படைகள் தொடர்ந்து முன்னேறி வருகின்றன. கெர்சன் பிராந்தியத்தில் மிக முக்கியமான கெர்சன் நகரம் உக்ரைன் படைகளிடம் வீழ்வதைத் தடுப்பதற்காக சிவிலியன்களை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் பெருமெடுப்பில் நடைபெறுகின்றன.

இதேவேளை, ரஷ்யா கடந்த பத்து நாட்களாக உக்ரைனின் பல பகுதிகளிலும் மின் பரிமாற்ற மையங்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தியிருப்பதை அடுத்து நூற்றுக்கணக்கான நகரங்கள் இருளில் மூழ்கியுள்ளன. குளிர்காலம் தொடங்கியுள்ள வேளையில் மின் துண்டிக்கப்பட்டிருப்பது மக்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

தலைநகர் கீவ் மீது ரஷ்யா தொடர்ந்தும் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகிறது. உக்ரைனின் வான் பாதுகாப்பு சாதனங்கள் ரஷ்யாவின் சில ஏவுகணைகளை வானில் தடுத்து வெடிக்கச் செய்தன என்று கீவ் நகர அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பிரிட்டனில் ஒரு நாள் முழுக்க உணவை தவிர்க்கும் இலட்சக்கணக்கான மக்கள்!

லண்டன், ஒக். 21

உலகில் உள்ள வளர்ந்த நாடுகளில் ஒன்றாக பிரிட்டன் உள்ளது. ஆனால், பணவீக்கம் காரணமாக கடந்த சில மாதங்களாக அங்கு நிலைமை சரியில்லை என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக புட் பவுண்டேஷன் சாரிட்டி என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பிரிட்டனின் உணவுப் பாதுகாப்பின்மை காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் ஒரு நாள் முழுவதும் உணவைத் தவிர்ப்பதாக தெரிய வந்துள்ளது. பிரிட்டனில் கடந்த சில மாதங்களாக நிலைமை ஏற்கெனவே மோசமடைந்து வருகிறது. நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால் நிலைமை மோசமாகி உள்ளது. கொரோனா பெருந்தொற்று, ரஷ்யா-உக்ரைன் போர், பிரிட்டனில் அதிகரித்து வரும் பணவீக்கம் போன்ற காரணிகளால் அங்கு விநியோகச் சங்கிலி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக குறைந்த வருமானம் கொண்ட 5 குடும்பங்களில் ஒன்று உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டு வருகிறது. இதனால் பிரிட்டனில் உள்ள 18 சதவீத குடும்பங்கள் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் தங்கள் உணவு நுகர்வைக் குறைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், ஆறு சதவீதம் பேர் ஒரு நாள் முழுவதும் உணவு ஏதும் இல்லாமல் தங்களது நாளை முடித்துக் கொண்டுள்ளனர். அதாவது அன்றைய நாள் உணவை முழுவதும் அவர்கள் தவிர்த்துள்ளனர்.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பிரிட்டன் அனுபவித்த மோசமான உணவுப் பாதுகாப்பின்மை இதுவாகும். இந்த நெருக்கடிக்கு மத்தியில், நாட்டின் குழந்தைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இவ்வாறு பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இலவச உணவு வழங்குவதற்கான கோரிக்கைகள் எழுப்பப்பட்டுள்ளன.

இதுகுறித்து புட் பவுண்டேஷன் சாரிட்டி அமைப்பின் தலைமை நிர்வாகி நவோமி டங்கன் கூறும்போது, "பிரிட்டனில் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இந்த நிலைமை தற்போது மேலும் மோசமடைந்து வருகிறது. இதுபோன்று பாதிக்கப்படும் அனைத்து குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு பள்ளிகளில் இலவச உணவு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறோம்" என்றார். (அ)

# மத்திய கிழக்கில் தளங்களை அமைத்த அமெரிக்க இராணுவ பிரிவு மூடப்பட்டது

நியூயோர்க், ஒக். 21

சவூதி அரேபியா, ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளில் விமானநிலையங்களை உருவாக்க உதவிய அமெரிக்க விமானப்படை பிரிவு மூடப்பட்டுள்ளதாக பென்டகன் அதிகாரி கடந்த புதன்கிழமை தெரிவித்தார்.

அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது இராணுவ ஈடுபாட்டை மாற்ற விரும்புவதை இது குறிக்கிறது.

557ஆவது எக்ஸ்பெடிஷனரி ரெட் ஹோர்ஸ் தனது சேவையின் முடிவைக் குறிக்கும் வகையில் கடந்த வார இறுதியில் கத்தாரில் அல்-உடீத் விமானத் தளத்தில் விழாவை நடத்தியது.

குறிப்பாக 2021 இல் ஆப்கானிஸ்தானில் இருந்து குழப்பமான விலகலைத் தொடர்ந்து அமெரிக்கா, மத்திய கிழக்கில் உள்ள துருப்புக்களின் எண்ணிக்கையை மெதுவாகக் குறைத்துள்ளது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட பிடன் நிர்வாகத்தின் புதிய தேசிய பாதுகாப்பு மூலோபாயத்தின்படி, அமெரிக்க வெளியுறவுக் கொள்கை "அதிக சமயங்களில் இராணுவத்தை மையமாகக் கொண்ட கொள்கைகளுக்குச் செயலாற்றியிருக்கிறது, இது வலிமை மற்றும் ஆட்சி மாற்றத்தின் மீதான நம்பத்தகாத நம்பிக்கையின் அடிப்படையிலான நிலையான விளைவுகளை அளிக்கும்."

சீனா மற்றும் ரஷ்யாவில் இருந்து அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கு முன்னணி அச்சுறுத்தல்கள் வெளிவருவதால், அமெரிக்கா தனது அரசியல் மற்றும் இராணுவ நிலைகளை மாற்றியமைத்து வருகிறது.

யுஎஸ் அவுட்லெட் ஸ்டார்ஸ் அண்ட் ஸ்ட்ரைப்ஸ் யூனிட் மூடுவது குறித்து முதலில் அறிவித்தது மற்றும் விமானப்படையின் 816வது எக்ஸ்பெடிஷனரி ஏயார்லிப்ட் ஸ்குவாட்ரான் கடந்த மாதம் செயலிழக்கச் செய்யப்பட்டதாகக் கூறியது. "நாங்கள் முன்னுரிமைகளை மாற்றியுள்ளோம்," என்று 99ஆவது மிஷன் ஆதரவு குழுவின் தளபதி கேணல் அந்தோனி ஃபிகியேரா ஸ்டார்ஸ் அண்ட் ஸ்ட்ரைப்ஸிடம் கூறினார்.

ஆயினும்கூட, அமெரிக்கா தொடர்ந்து மத்திய கிழக்கில் ஈடுபட்டு வருகிறது. (அ)



# ஆளில்லா விமான விவகாரம்: ஐ.நாவை எச்சரிக்கிறது ரஷ்யா!

மொஸ்கோ, ஒக். 21

ஐ.நா.வின் ஆயுதக் கட்டுப்பாடுகளை மீறும் வகையில், ஈரானில் இருந்து வந்த ஆயுதங்கள் உக்ரைனில் பயன்படுத்தப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில், விசாரணை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபைக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த திங்களன்று உக்ரைன் மீதான தாக்குதலில், குறைந்தபட்சம் ஐந்து பேரைக் கொன்றது மற்றும் மின் நிலையங்கள் மற்றும் பிற குடிமக்களின் உள்கட்டமைப்புகளுக்கு பரவலான சேதத்தை ஏற்படுத்திய பின்னர், ட்ரோன்கள் குறித்த மூடிய கதவு பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திற்கு அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவை அழைப்பு விடுத்தன.

உக்ரைன் தனது இராணுவம் 220 க்கும் மேற்பட்ட ஈரானிய ஆளில்லா விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகக் கூறுகிறது. இது முறையாக க்ருவ்டு ஏரியல் வாகனங்கள் என்று அழைக்கப்பட்டது, மேலும் ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸை உக்ரைனுக்கு அழைத்துள்ளது.

புதன்கிழமை பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்திற்குப் பிறகு பேசிய ரஷ்யாவின் துணை ஐ.நா தூதர் டிமிட்ரி பாலியன்ஸ்கி, ஆயுதங்கள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை என்று வலியுறுத்தினார் மற்றும் "ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் மற்றும் சதி கோட்பாடுகளை" கண்டனம் செய்தார்.

அவர் குட்டரெஸ் மற்றும் அவரது ஊழியர்களுக்கு "எந்தவொரு முறைகேடான விசாரணையில் ஈடுபடுவதையும் தவிர்க்க வேண்டும். இல்லையெனில், அவர்களுடனான எங்கள் ஒத்துழைப்பை நாங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும், இது யாருடைய நலனுக்காகவும் இல்லை, "என்று அவர் செய்தியாளர்களிடம் கூறினார்.

தரையிறங்கும்போது வெடிக்கும் குறைந்த விலை ட்ரோன்களான ஷாஹெட்-136 விமானங்களை ஈரான் ரஷ்யாவுக்கு வழங்கியதற்கான ஆதாரம் தங்களிடம் இருப்பதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் கூறுகின்றன.

எந்தவொரு ஆயுதப் பரிமாற்றமும் 2015 ஆம் ஆண்டின் கூட்டு விரிவான செயல்திட்டத்தின் ஒரு பகுதியான ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 2231 க்கு முரணானது என்று வாஷிங்டன் கூறுகிறது, இது ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும், நாடு அணு ஆயுதத்தை உருவாக்குவதைத் தடுப்பதற்குமான ஒப்பந்தமாகும்.

ஈரான் ரஷ்யாவிற்கு ட்ரோன்களை வழங்குவதை மறுக்கிறது. இந்த வார தொடக்கத்தில் வெளியுறவு மந்திரி டிமிட்ரோ குலேபா தெஹ்ரானுடனான இராஜதந்திர உறவுகளை உக்ரைன் முறித்துக் கொள்ள வேண்டும் என்று கூறியதை அடுத்து "இந்த குற்றச்சாட்டுகளை அகற்ற உக்ரைனுடன் உரையாடல் மற்றும் பேச்சுவார்த்தைக்கு" தயாராக இருப்பதாக கூறியது.

புதனன்று, ஈரானின் ஐ.நா. தூதர் அமீர் சயீத் இரவானி, ட்ரோன் இடமாற்றங்கள் குறித்த "ஆதாரமற்ற மற்றும் ஆதாரமற்ற கூற்றுக்களை" நிராகரித்து, மோதலுக்கு "அமைதியான தீர்வு" வேண்டும் என்று கூறினார்.

உக்ரைனின் அழைப்பில் "எந்தவொரு சட்ட அடிப்படையும் இல்லை" என்று இரவானி கூறினார், மேலும் உக்ரைன் போர் தொடர்பான பிரச்சினைகளில் தீர்மானம் மற்றும் ஐ.நா அதிகாரிகளின் "எந்தவொரு தவறான பயன்பாட்டையும் தடுக்க" குட்டெரெஸை அழைத்தார்.

"யுஏவிகள் உட்பட எந்த நாட்டிற்கும் ஆயுத ஏற்றுமதி எதுவும் தீர்மானம் 2231 ஐ மீறுவதில்லை என்று ஈரான் உறுதியாக நம்புகிறது" என்று அவர் மேலும் கூறினார். (அ)

## இருபது - 20 உலகக் கிண்ணம்

# ‘சுப்பர் - 12’ சுற்றுக்கு இலங்கை முன்னேற்றம்!

மெல்பர்ன், ஒக். 21

குசல் மெண்டிஸின் அபார அரைச்சதமும் துல்லிய மான பந்துவீச்சும் கைகொடுக்க நெதர்லாந்து அணியை 16 ஓட்டங்களால் வீழ்த்தியது இலங்கை அணி. சுப்பர் - 12 சுற்றுக்கு முன்னேறியது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தகுதி சுற்று போட்டியின் மெல்பர்னில் நேற்று நடந்த போட்டி யில் நெதர்லாந்து - இலங்கை அணிகள் மோதின. ஏ குழுவில் இடம்பிடித்துள்ள இந்த இரு அணிகளுக்கும் இது இந்த சுற்றில் இறுதிப் போட்டியாகவும் அமைந் தது.

நேற்றைய போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி யது. இதன்படி, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் களை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், நெதர்லாந்து அணி வெற்றிபெற 20 ஓவர்களில் 163 ஓட்டங்களை வெற்றி இலக்காக இலங்கை அணி நிர்ணயித்தது.

மிகத் திறமையாக துடுப்பெடுத்தாடிய குசல் மெண் டிஸ், சரித் அசலங்க ஆகிய இருவரும் 3ஆவது விக் கெட்டுக்காக 60 ஓட்டங்களைப் பகிர்ந்து அணி யைப் பலப்படுத்தினர். குசல் மெண்டிஸ் 44 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களுடன் 79 ஓட்டங்களை யும் சரித் அசலங்க 31 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களைவிட பானுக்க ராஜபக்ஷ 19 ஓட்டங்களை யும் பதும் நிஸங்க 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

நெதர்லாந்து பந்துவீச்சில் போல் வென் மிக்



கெரென் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் பாஸ் டி லீட்ஸ் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களை யும் கைப்பற்றினர்.

இந்நிலையில் பதிலுக்கு துடுக்பெடுத்தாடிய நெதர் லாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்று 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நெதர்லாந்து சார்பாக ஆரம்ப வீரர் மெக்ஸ் ஓ டவ்ட் தனி ஒருவராக போராடி 53 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 71 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தபோதிலும் இலங் கையின் வெற்றியை அவரால் தடுக்க முடியாமல் போனது. (ஐ)

## கோப்பாய் கலைவாணியின் இல்லமெய்வன்மை போட்டி!

யாழ்ப்பாணம், ஒக். 21

கோப்பாய் கலைவாணி கல்வி நிறுவனத்தின் 25ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இல்ல மெய் வல்லுநர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிறுவன இயக்குநர் சிவராசா சிவரூபன் தலைமை யில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக வட மாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. ராஜசீலன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உடற்கல்வி, உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்ஜபந்து வெத கெதர, யாழ். அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி ஸ்ரீ. முருகசோதி, கோப்பாய் சரவணவ பவானந்தா வித்தியால அதிபர் திருமதி பி.ஜெய



ரட்ணராஜா, கௌரவ விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ந.முருக தாஸ் காந்தன், கிராமசேவகர் சுரேஸ்குமார் நித்தியா, ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ‘வடக்கின் சமர்’ உதைபந்தாட்டம் கலைஒளி, ஞானமுருகன் வெற்றி!



ஞானமுருகன்



கலைஒளி

யாழ்ப்பாணம், ஒக். 17

வடக்கின் சமர் உதைபந்தாட்டத் தொடரில் ஆனைக்கோட்டை கலைஒளி, மயிலங்காடு ஞான முரு கன் அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் ஊரெழு றோயல் விளையாட்டு கழகம் வடக்கின் சமர் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்துகிறது.

நேற்று வியாழக்கிழமை நடந்த முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை கலைஒளி விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை சென். லூட்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இரண்டு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் கலைஒளி அதிரடி காட்டி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது. அதிரடியாக விளையாடிய ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஐ)

## இருபது - 20 உலகக் கிண்ணம்

# சிம்பாப்வேயை வீழ்த்தியது மேற்கிந்தியத் தீவுகள் அணி!

ஹோபார்ட், ஒக். 21

சிம்பாப்வே அணியை 31 ஓட்டங்களால் வெற்றி பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி. இந்த வெற்றி உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறு வதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் ஹோபார்ட்டில் நடந்த போட்டி யில் சிம்பாப்வே - மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின.

அல்ஸாரி ஜோசப் பதிவுசெய்த இந்த வருட உலகக் கிண்ணத்திற்கான அதிசிறந்த பந்துவீச்சு பெறுதியும் ஜசன் ஹோல்டரின் துல்லியமான பந்துவீச்சும் மேற்கிந்தியத் தீவுகளின் வெற்றியை இலகுவாக்கின.

இந்தப் போட்டியில் கணிசமான ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்பதை அறிந்து முதலில் துடுப் பெடுத்தாடத் தீர்மானித்த மேற்கிந்தியத் தீவுகள் 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 157 ஓட்டங்க ளைப் பெற்றது.

ஆரம்ப வீரர் மேயர்ஸ் கய்ல் (13) குறைந்த ஓட் டங்களுக்கு ஆட்டமிழந்த போதிலும் ஜொசன்சன் சார்ள்ஸ், எவின் லூயிஸ் ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் பகிர்ந்த 49 ஓட்டங்கள் மேற்கிந்தியத் தீவுகளுக்கு சற்று தெம்பூட்டுவதாக அமைந்தது.

எனினும், சுழல்பந்துவீச்சாளர்களை சிம்பாப்வே களமிறக்கியதும் விக்கெட்கள் சரியத் தொடங்கின.

சார்ள்ஸ், லூயிஸ் ஆகியோரின் இணைப்பாட் டத்தை சிக்கந்தர் ரஸா முடிவுக்கு கொண்டுவந்ததை அடுத்தே மேற்கிந்தியத் தீவுகளின் விக்கெட்கள் சரியத் தொடங்கின. 10ஆவது ஓவரில் 77 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்திருந்த மேற்கிந்தியத் தீவுகள் அதன் பின்னர் 24 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 5 விக்கெட்களை இழந்தது. (101 - 6 விக்.)

எனினும், 7ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த ரோவ்மன் பவல், அக்கீல் ஹூசைன் ஆகிய இருவரும் 49 ஓட்டங்களைப் பகிர்ந்து மொத்த எண்ணிக்கை 150 ஓட்டங்களைக் கடப்பதற்கு உதவினர்.

துடுப்பாட்டத்தில் ஜோன்ஸ்ஸ் சார்ள்ஸ் 45 ஓட்டங் களையும் ரோவ்மன் பவல் 28 ஓட்டங்களையும் அக் கீல் ஹூசைன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களை யும் எவின் லூயிஸ் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிம்பாப்வே பந்துவீச்சில் சிக்கந்தர் ரஸா 19 ஓட்டங் களுக்கு 3 விக்கெட்களையும் ப்ளெசிங் முஸாரபனி 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் சோன் வில்லி யம்ஸ் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

154 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 18 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங் களைப் பெற்று தோல்வியைத் தழுவியது.

வெஸ்லி மெதேவியர், றெஜிஸ் சக்கப்வா ஆகிய இருவரும் அதிரடி துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 14 பந்துகளில் 29 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது சக்கப்வா 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதனைத் தொடர்ந்து சிம்பாப்வேயின் விக்கெட்கள் சரியத் தொடங்கியதுடன் குறிப்பிட்டுச் சொல்லும் அளவுக்கு துடுப்பாட்ட வீரர்கள் பிர காசிக்கவில்லை. மத்திய வரிசை வீரர் லூக் ஜொங்வே 29 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார். அவரை விட ஆரம்ப வீரர்களில் ஒருவரான மெதேவியர் 27 ஓட்டங்களையும் றெயான் பூரி 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

முதலாவது போட்டியைப் போன்று இந்தப் போட்டியிலும் துடுப்பாட்டத்தில் அசத்துவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சிக்கந்தர் ரஸா 14 ஓட்டங்களை மாத்திரமே பெற்றார். மேற்கிந்தியத் தீவுகள் பந்துவீச்சில் அல்ஸாரி ஜோசப் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களையும் ஜசன் ஹோல்டர் 3.2 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இந்த வருட உலகக் கிண்ண கிரிக்கெட் அத்தி யாயத்தில் அல்ஸாரி ஜோசப்பின் பந்துவீச்சுப் பெறுதி அதிசிறந்ததாக இப்போதைக்கு பதிவாகியுள்ளது.

இந்தப் போட்டி முடிவை அடுத்து பி குழு அணிகளின் சுப்பர் - 12 சுற்றுக்கான வாயில் அகல திறந்துவிடப்பட்டுள்ளது. நான்கு அணிகளும் தலா ஒரு வெற்றியுடன் 2 புள்ளிகள் பெற்றுள்ளதால் எஞ்சி யிருக்கும் 2 போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் சுப்பர் 12 சுற்றில் விளையாட தகுதிபெறும் வாய்ப்பு உள்ளது. எனினும், அடுத்த போட்டிகளைப் பொறுத்தே இந்த வாய்ப்பு அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 220 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் வைப்பிலிடப்பட்ட 'இடுகம' பாதுகாப்பு நிதியத்தை மூடுவதற்கு தீர்மானம்

கொழும்பு, ஒக். 21

**'செய் கடமை' (இடுகம) கோவிட் 19 - சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தை முடிவுக்குக் கொண்டுவர அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

இதற்கமைய 'கோவிட் 19- சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் பேரில் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த 85737373 என்ற உத்தியோக பூர்வ கணக்கு 2022ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதியின் பின்னர் செயற்படாது என சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயலாளர் கலாநிதி.தாரக்க லியனபத்திரன தெரிவித்தார்.

எனவே அதில் பணம் வைப்பிலிட வேண்டாம் என்றும் இந்தக் கணக்கில் வைப்பிலிடுவதற்காக இனிமேலும் பணமோ, காசோலையோ அனுப்ப வேண்டாம் என்றும் நன்கொடையாளர்களிடம் அவர் கோரியுள்ளார்.

கோவிட் 19 பெருந்தொற்றின்போது, நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சுகாதார பாதுகாப்புப் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக நன்கொடையாளர்கள் அளித்த ஒத்துழைப்பிற்கு சுகாதார சமூக பாதுகாப்பு நிதியத்தின் செயலாளர் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

கோவிட் நிதிக்காக நன்கொடை யாளர்களிடமிருந்து 220 கோடியே 71 இலட்சத்து 64 ஆயிரத்து 785 ரூபாய் 58 சதம் (ரூ. 2,207,164, 785.58) கிடைக்கப்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022 ஒக்ரோபர் 18ஆம் திகதி கணக்கு மிகுதியின் பிரகாரம் கொவிட் நிதியில் 21 கோடியே 68 இலட்சத்து 77 ஆயிரத்து 431 ரூபாய் (ரூ. 216,877,431.05) எஞ்சியுள்ளதாகவும் இதனை ஜனாதிபதி நிதியில் வைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மக்களுக்கு அறுவைச் சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிகளை வழங்குவதற்காக அந்த நிதி பயன்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பாண், பேக்கரி உற்பத்திகளின் விலை குறைக்கப்படமாட்டாது

கொழும்பு, ஒக். 21

கோதுமை மா கிலோ ஒன்றின் மொத்த விலை 25 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள போதிலும் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளை குறைக்க முடியாது என அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை 270 ரூபாவால் அதிகரிக்கப்பட்டபோதே பாணின் விலையை நாங்கள் அதிகரித்தோம்.

கோதுமை மாவின் விலை 400 ரூபாவாக உயர்த்தப்பட்டபோதிலும் பாண் இறாத்தல் ஒன்றின் விலை அதிகரிக்கப்படவில்லை.

400 ரூபா என்ற ஒரு கிலோ கிராம் கோதுமைமாவின் விலையை 100 ரூபாவால் குறைப்பதால் பாணின் விலையை குறைக்க முடியாது.

பாண் மற்றும் பணிஸ் ஆகியவற்றின் விலைகளை குறைக்க வேண்டுமாயின் கோதுமை மாவை விநியோகிக்கும் இரண்டு பிரதான நிறுவனங்கள் கோதுமையின் விலையை குறைக்கவேண்டும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கோதுமை மாவின் விலையை நிலையாக பேணுவதற்காக அதனை துருக்கி மற்றும் டுபாய் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்ததாக பாராளுமன்றில் கருத்து வெளியிட்ட வர்த்தக அமைச்சர் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார். (அ)



# மன்னார் ஓலைத்தொடுவாயில் மக்கள் கவனவீர்ப்பு போராட்டம்

மன்னார், ஒக். 21

வடக்கு- கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 81 வது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை மன்னார் ஓலைத்தொடுவாய் பகுதியில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும், நாங்கள் நாட்டை துண்டாடவோ தனியரசையோ கேட்கவில்லை என்றும் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வையே கேட்கிறோம் எனவும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரித்துள்ளனர்.

இந்த போராட்டத்தில் ஓலைத்தொடுவாய் பகுதியில் உள்ள பெண்கள் ஆண்கள், இளைஞர்கள் மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நெல் கொள்வனவுக்கு நிதி கிடைக்கவில்லை

கொழும்பு, ஒக். 21

சிறு போகத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல் இதுவரை கொள்வனவு செய்யப்படவில்லை என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

நெல் கொள்வனவுக்கான நிதியை அரச வங்கிகளிடம் கோரியுள்ள போதிலும், இதுவரை அந்த பணம் கிடைக்காமையால் நெல்லை கொள்வனவு செய்ய முடியாதுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஷ்பகுமார குறிப்பிட்டார்.

வங்கிகளிடமிருந்து நிதி கிடைக்கும் காலம் இதுவரை அறிவிக்கப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

கடனுக்கான வட்டி 28 வீதம் அறிவிடப்படும் என வங்கிகளூடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

எனினும், வட்டி வீதம் அதிகம் என்பதால் அதனை குறைத்துக்கொள்வது தொடர்பில் வங்கிகளுடன் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளதாக அவர் கூறினார்.

சிறு போகத்தில் ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 120 ரூபாவிற்கும் ஒரு கிலோகிராம் சம்பா நெல் 125 ரூபாவிற்கும் ஒரு கிலோகிராம் கீரி சம்பா நெல் 130 ரூபாவிற்கும் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் ரோஹண புஷ்பகுமார சுட்டிக்காட்டியுள்ளார். (அ)



# பொலிஸாரின் சூட்டில் உயிரிழந்த பல்கலை மாணவர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 21

பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த பல்கலை மாணவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

கடந்த 2016 ஆம் ஆண்டு பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களாகிய நடராசா கஜன், பவுண்ராஜ் சுலக்சன் நினைவுதினம் நேற்று யாழ். பல்கலை மாணவர்களால் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்.பல்கலையின் பிரதான தூபியில் இருவரின் உருவப் படங்களுக்கு மாணவர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

## கோதுமை மா இறக்குமதிக்கு நேற்று அமைச்சரவை அனுமதி



கொழும்பு, ஒக். 21

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை கோதுமை மா இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

திறந்த கணக்கினூடாக கோதுமை இறக்குமதி செய்வதற்கே அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. (அ)

# கிளிநொச்சியில் 9,971 குடும்பங்கள் உணவு பற்றாக்குறையால் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி மாவட்டத்தில் 9 ஆயிரத்து 971 குடும்பங்கள் உணவு பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அராசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கருத்துரைத்தபோதே அவர் இதனை கூறினார்.

அத்துடன், 5 வயதுக்கு உட்பட்ட 576 சிறார்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 784 கர்ப்பிணித் தாய்மார்கள் வறுமையினால் பாதிக்கப்படுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## திருத்தங்கள்...

னார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "இரண்டு மொழி எனில் ஒரு நாடு ஒரு மொழி எனில் இரண்டு நாடு என்ற கொல்வின் ஆர். டி. சில்வாவின் தீர்க்க தரிசனத்தைப் புறந்தள்ளி, போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்ற ஜே.ஆர்.

## பெருந்தோட்டத்...

தலை விடுத்தார்.

மேலும், "பெருந்தோட்டத் துறையில் நிலவும் பாரதூரமான நிலைமைகளை உள்நாடு, சர்வதேச அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கையில் இன்று ஒப்பீட்டளவில் மிகவும் நலிவுற்ற பிரிவினர் 51 விகிதமான பெருந்தோட்ட மக்கள் என்பதைக் கவனியுங்கள். இது எமக்குத் தெரியும். கை புண்ணை காண கண்ணாடி தேவையில்லை. ஆனால், இதைத்தான் இன்று உலக சமுதாயமே கூறுவதைக் கவனியுங்கள். அங்கே துர்ப்பாக்கிய பட்டினி சாவு நடக்க முன் இதை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம் என்பதையும் கவனியுங்கள்.

ஐ.நா. விசேட அறிக்கையாளர் டோமொயா ஒபொகடா பெருந்தோட்ட மக்கள் ஒடுக்கப்படுவதில், பெருந்தோட்ட மக்கள் சிறுபான்மை தமிழர்கள் என்ற காரணமும் இருக்கின்றது என்று கூறியுள்ளார். இது பாரதூரமான ஆனால், உண்மை குற்றச்சாட்டு. இங்கே இனவாதம் நிலவுகின்றது. அதை அவர் ஐ. நா. மனித உரிமை ஆணைக் குழுவுக்கு கூறியுள்ளார்.

நான் ஏற்கனவே இதுபற்றிய கலந்துரையாடலை ஆரம்பிக்கும்படி கொழும்பில் உள்ள ஐ. நா. மனித உரிமை ஆலோசகர் ஜுஹான் பெர்னாண்டசுக்கு எழுதிக் கூறியுள்ளேன். விசேட ஐ. நா. அறிக்கையாளர் டோமொயா இது பற்றிய எனது டுவிட்டர் செய்திக்குப் பதிலளித்துள்ளார். அடுத்த வருடம் மலையகத் தமிழர் பிரச்னையையும் ஐ. நா. மனித உரிமை ஆணையகத்தில் எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

ரணில் விக்கிரமசிங்க அன்று பிரதமர் பதவியில் இருக்கும் போது, எனக்கு இந்தச் சபையில் ஒரு உறுதி மொழி வழங்கினார். தோட்டங்களில் இருக்கும் பயன்படுத்தப் படாத நிலங்களை அங்கு வாழும் மக்களுக்கு வீட்டுத் தோட்டங்களை செய்ய வழங்குவதாகக் கூறினார். அந்தத் திட்டத்துக்கு, 'மனோ கணேசன் திட்டம்' என எனது பெயரை வைப்பதாகவும் கூறினார். ஒன்றும் நடக்கவில்லை. எனது பெயர் வேண்டாம். துன்பப்படும் மக்களுக்கு காணி வழங்க அனைத்து தரப்புகளையும் அழைத்து கூட்டம் நடத்துங்கள். அது போதும்.

சமுர்த்தி திணைக்களம், பெருந்தோட்ட மக்களை பொருட்படுத்துவதே இல்லை. பிழையான கணக்குகளை வைத்துகொண்டு, இலங்கையில் மிகவும் நலிவுற்ற பிரிவினர் என உலகமே சொல்லும் பெருந்தோட்ட மக்களுக்கு சமுர்த்தி உதவிகள் வழங்குவதில்லை. வாழ்வாதார உதவிகள் வழங்குவதில்லை. சமுர்த்திப் பட்டியலில் பெருந்தோட்ட மக்கள் இல்லையென்று, சமுர்த்தி திட்டத்துக்கு நிதி உதவி செய்யும், ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு நான் சொல்லப் போகின்றேன். பாராளுமன்றம், இலங்கையின் மிகவும் நலிவுற்ற பிரிவினரான இந்தப் பெருந்தோட்ட மக்களின் மீது விசேட அவதானத்தைச் செலுத்த வேண்டும் என நான் பிரேரிக்கின்றேன்." - என்றார். (ஐ)

ஜெயவர்த்தனவின் இனவெறிதான், இன்று இந்த நாட்டின் அதிபயங்கர நிலைக்கு அடிகோலியது.

1978ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பும், அவரின் இனவாத நிலைப்பாடுமே இந்த நாட்டில் ஒரு பெரும் இரத்தக்களரியை ஏற்படுத்தியிருந்தது. அந்த யாப்பு உருவாக்கத்தில் தந்தை செல்வாவின் மருமகனான ஜே. வில்சன் முக்கிய பங்காற்றியிருந்தார் என்று திருத்தச் சட்டத்தைச் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டிருந்தார். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அந்த யாப்பு உருவாக்கத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இணைந்து செயல்பட்டதையிட்டு தான் மானசீகமாக மனம்வருந்துவதாக ஏ. ஜே. வில்சன் ஒரு நூலையே எழுதி வெளியிட்டுள்ளார் என்பதை அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வெறுமனே யாப்புத் திருத்தங்களை கொண்டு வருவதாலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதாலும் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை அதிகார பீடத்துக்கு வரும் தலைவர்கள் உணர மறுப்பதுதான் இந்த நாட்டின் சாபக்கேடு. இந்த நாடு அரசியல் ஸ்திரத்தன்மை அற்றிருப்பதற்கும் பொருளாதார ரீதியாக அதலபாதாளத்தில் இருப்பதற்கும் இந்த நாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்னையும் அதன்வழி நிகழ்ந்தேறிய பெரும் போரும்தான் முதன்மைக்காரணம்.

ஆனால், அந்தப் போர் முடிவுற்று 12 ஆண்டுகளைக் கடந்தும் போருக்கான காரணம் குறித்தோ, தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் குறித்தோ எந்தச் சிங்களத் தலைவர்களும் செவிசாய்க்கவில்லை. போரை வென்ற, சர்வ வல்லமை பொருந்திய அரசராக சிங்கள மக்களால் கொண்டாடப்பட்ட மகிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தால், தனக்கிருந்த பெரும்பான்மையை வைத்து இனப்பிரச்னைக்கான தீர்வை வழங்கியிருக்கலாம். அந்தச் சிந்தனையற்றிருந்த அவரின் இனவெறிதான் அவரை இந்த நிலைக்கு ஆளாக்கியிருக்கின்றது.

இனிமேலாவது சிங்களத் தலைவர்கள் மக்கள் மனங்களை வெல்லும் வகையில் செயல்பட வேண்டும். 200 வருட விவசாய அனுபவமும், ஆற்றலும் கொண்ட மலையக மக்களுக்கு குடியிருப்பதற்கே முடியாதளவுக்கு 7 பேர்ச் காணி மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது. விவசாயத்துக்கான நிலங்களையும், காலம்காலமாக அவர்கள் கோரும் சம்பள உயர்வையும் அவர்களுக்கு வழங்க முன்வாருங்கள். இதன்மூலம் அவர்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டமைப்பார்கள் - என்றார். (ஐ)

## தேர்தலை...

சாரி முன்னணி, 43 ஆவது படையணி, பிவித்துரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நவ லங்கா சுதந்திரக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, விஜயதரணி மக்கள் சபை, முன்னிலை சோசலிசக் கட்சி, உத்தர சபை உள்ளிட்ட கட்சிகள் இதில் கையொப்பமிட்டன.

தேர்தல் மறுசீரமைப்பு என்ற போர்வையில் உள்ளூராட்சி மன்ற தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சித்தால் அதற்கு எதிராகத் தனியாக அல்லது ஒன்றிணைந்த ரீதியில் எதிர்ப்பு வெளியிடப்படும் என குறித்த பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரகடனத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக மக்கள் விடுதலை முன்னணியும் அறிவித்துள்ளது. (ஐ)

## புதிய...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

ஒரு தனிமனிதனிடம் அதிகாரங்கள் குவிவது எண்ணற்ற தாக்கங்களை ஏற்படுத்தும். ஆனால், வலுவான நிறைவேற்று ஜனாதிபதி சிறுபான்மையினருக்கு நன்மைகளை கொண்டு வரமுடியும். ஜனாதிபதி விரும்பினால் தனது கட்டுப்பாடற்ற அதிகாரங்களை கொண்டு சிறுபான்மையினரின் பிரச்னைகளுக்கு நிவாரணமளிக்க முடியும். ஆனால், அது எவ்வளவு தூரம் சாத்தியமாகும் என்பது ஜனாதிபதியின் ஆளுமையை பொறுத்தது.

தமிழர் இனப் பிரச்னையின் தன்மையும் இலங்கை தீவில் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான இலங்கை தமிழர்களின் நீண்ட வரலாற்றையும் அறிந்து முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் எமது பிரச்னையை ஜனாதிபதி தீர்த்து வைப்பது நாட்டுக்கு நல்லது.

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து சமூகங்களும் கைகோத்து முன்னோக்கி பயணிக்கும் வகையில் வடக்கு - கிழக்கு முழு அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும். ஜனாதிபதிக்கும் - 9ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது நீண்டகால பிரச்னைகளுக்கு முழுமையானதும் வினைத்திறனாகவும் தீர்வு காண்பதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது.

கூட்டு ஆட்சி முறைமையே இந்த நாட்டுக்கு சிறப்பானதாக இருக்கும் என்பது எனது கருத்து. தற்போதைய அரசமைப்புக்குப் பதிலாக புதிய அரசமைப்புச் சட்டத்தை கொண்டு வருவது, பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக்கூட தமிழர்களுக்கு இல்லாமல் செய்ய முடியும்.

எனவே, இலங்கைக்கான புதிய அரசமைப்பு உருவாக்கத்தில், இந்தியாவின் உதவியைப் பெறுவது இலங்கையில் உள்ள இலங்கைத் தமிழர்களின் எதிர்காலத்துக்கு சிறந்ததாக இருக்கும் - என்றார். (ஐ)

## சிறீதரன்...

துள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

இதன்போது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன இறக்கும் காலத்தில் சமஷ்டி கொள்கையே இலங்கைக்கு பொருத்தம் - என்றார். ஆனால், அவரின் பின் வந்த லலித் அத்துலத்முதலி, காமினி திஸநாயக்க, ஆர். பிரேமதாஸ , மஹிந்த ராஜபக்ச போன்றோரும் இனவாதத்தையும், பௌத்தவாதத்தையும் முன்னிறுத்தி செயல்பட்டனர் என்றார்.

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய மயந்த திஸநாயக்க, சிறீதரனை விளித்து, "எனது தந்தையான காமினி திஸநாயக்க, இனவாதி அல்ல. கருத்துக்களை கூறும்போது சரியான கருத்துக்களை கூற வேண்டும். இதற்கு நான் இடம்தரப்போவதில்லை", என்றார்.

இதை ஏற்க மறுத்த சிறீதரன், "உங்களுடைய தந்தை இனவாதியாக இல்லாவிட்டால், எதற்காக யாழ்ப்பாண நூலகத்தை எரியூட்டினார்" என்றார்.

அதற்கு மயந்த, "எனது தந்தை யாழ். நூலகத்தை எரிக்கவில்லை", என்று கூறினார்.

இதற்கு, "உங்கள் தந்தையே யாழ். நூலக எரிப்பின் பிரதான சூத்திரதாரி. தலைமை தாங்கும் உறுப்பினராக உள்ள நீங்கள், அக்கிராசனத்தைப் பயன்படுத்தி இந்த நாட்டில் மீள இனவாதத்தை விதைக்காதீர்கள்", என்று சிறீதரன் கூறினார். (ஐ)

## சிறுபான்மை...

ணன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் 18ஆம், 19ஆம், 20ஆம் திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்படும்போது பாராளுமன்றத்தில் இருந்திருக்கிறேன். ஆனால், 20இக்கு எதிராகவே வாக்களித்திருந்தேன். இரட்டைக் குடியுரிமைகள் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு தடை, சுயாதீன ஆணைக்குழுக்களை மீள ஸ்தாபித்தல் உள்ளிட்ட நல்ல விடயங்கள் 22ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளதால் அதற்கு ஆதரவளிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

அத்துடன் 22ஆம் திருத்தத்தில் உள்வாங்குவதற்கு எமது யோசனைகளையும் முன்வைத்திருக்கின்றோம். குறிப்பாக தேர்தல் மறுசீரமைப்பின் போது விகிதாசார முறையும் பின்பற்றப்பட வேண்டும்.

இதேபோன்று நிறைவேற்று ஜனாதிபதி முறையை இருந்தாலும்கூட, 13ஆம் திருத்தம் அமுலாக்கப்பட்டு, அதிகார பகிர்வு ஏற்படுத்தப்படவேண்டும். அதன் மூலமே சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு சந்தர்ப்பம் அமையும் - என்றார். (ஐ)

## 13.5 மில்லியன்...

களைப் பூர்த்தி செய்வதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இதன்மூலம், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 10 மில்லியன் ரூபாய் வரையில் கடன்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## 22ஆவது...

றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"இந்நாட்டில் மக்கள் போராட்டம் வெடித்தது - மாற்றம் கோரப்பட்டது. அத்தகையதொரு மாற்றத்தின் முதலாவது படியே 22 ஆவது திருத்தச்சட்ட மூலம் எனக் கூறப்பட்டது. ஆனால், இது பொய்யாகும். மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். எதிர்பார்த்த திருத்தங்கள் இடம்பெறவில்லை. எனவே, மக்கள் போராட்டம் வெடிக்கும். மக்களை ஏமாற்றும் இத்தகைய செயல்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். 20 மூலம் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரங்கள் 22 இலும் உள்ளது." - என்றார். (ஐ)

## 25ஆம் திகதி...

வழங்கப்படுவதாக கல்வி இராங்க அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. எனவே, மறுநாளான செவ்வாய்க்கிழமை தமிழ் பாடசாலைகளுக்கு சிறப்பு விடுமுறை வழங்கப்படுகிறது.

எனினும், எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை பதில் பாடசாலை நடைபெறும் என்றும் இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது. (ஐ)

## பிரிட்டன்...

விவகாரத்தில் பிரதமர் லிஸ் ட்ரஸ் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, பிரதமர் பதவி, கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமையிலிருந்து விலகுவது தொடர்பில் அவர், மன்னர் மூன்றாவது சார்ள்ஸுக்கு அறிவித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பதவியிலிருந்து விலகிய அவர் மக்களுக்கு ஆற்றிய உரையில்,

அடுத்த வாரத்துக்குள் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைக்கு தேர்தல் நடத்தப்படும். இது நமது நிதித் திட்டங்களை வழங்குவதற்கும் பொருளாதார உறுதித் தன்மை மற்றும் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தவும் உதவும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இரட்டைக் குடியுரிமை தடையை நீக்கினால் 22இற்கு ஆதரவில்லை

## சஜித் பிரேமதாஸ திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, ஒக். 21

**அரசமைப்பிற்கான 22 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் 'இரட்டை குடியுரிமை' தடை நீக்கப்படுமானால் அதற்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கிக் கையில்-

சில நிபந்தனைகளின் அடிப் படையில் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்க நாம் தீர்மானித்துள்ளோம்.



ஆனால் குழுநிலை விவாதத்தின்போது இரட்டை குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட தடைவிதிக்கும் யோசனை திருத்தப்படக்கூடாது. அந்த சட்டமூலத் தில் உள்ளவாறு இருக்க வேண்டும்.

இரண்டரை வருடங்களுக்கு பிறகு பாராளுமன்றத்தை ஜனாதி பதி கலைக்க முடியும் என்ற ஏற்பா டும் தொடர வேண்டும். இவற்றை மாற்றினால் ஆதரவு வழங்கப்பட மாட்டாது-என்றார். (அ)

# பாராளுமன்றில் ஊடகவியலாளர்கள் இனி தேநீர் அருந்துவதிலும் சிக்கல்!

கொழும்பு, ஒக். 21

ஊடகவியலாளர்களுக்கு பாராளுமன்றத்தினால் வழங்கப்படும் தேநீருக்கான கட்டணம் நான்கு மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை பத்திரிக்கையாளர்களின் தேநீருக்கு ரூ.25 வசூலிக்கப்பட்டது. அந்த தொகை ரூ.100 ஆக உயர்த் தப்படவுள்ளது. பாராளுமன்ற ஊழியர்களுக்கு மாதம் முழுவதும் உணவு, தேநீர் மற்றும் சகல வசதிகளுக்காக சுமார் ஆயிரம் ரூபா அறவிடப்படும் வேளையில் ஊட கவியலாளர்களின் தேநீருக்கான கட்டணம் நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களின் மதிய உணவின் விலையும் கடந்த மாதத்திலிருந்து 150 ரூபாவாக அதிகரிக்கப் பட்டது. (அ)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற 183 இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டனர்

கொழும்பு, ஒக். 21

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக அவுஸ்திரேலி யாவிற்கு வந்த 183 இலங்கையர் கள் திருப்பியனுப்பப்பட்டுள்ள தாக அவுஸ்திரேலிய கடல் எல் லைப் பாதுகாப்பின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்ற பிராந்திய மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவுஸ்திரேலியாவுக்கு சட்ட விரோத குடியேற்ற படகுகள் வரு வதை தடுக்கத் தேவையான நடவ டிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக வும் தங்கள் நாட்டுக்கு வரும் அகதி கள் அனைவரையும் திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுக்கப்ப டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியாவை சென்றடைய சுமார் 21 நாட்கள் ஆகும் என்றும் ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ் சுட்டிக்காட் டியுள்ளார். (அ)

# பளை பகுதியில் விபத்து

கிளிநொச்சி, ஒக். 21

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் விபத்து ஒன்று இடம்பெற் றுள்ளது.

நேற்று வியாழக்கிழமை யாழ்.நோக்கி வந்துகொண் டிருந்த பாரஊர்தி ஒன்றை பின்னால் வந்துகொண்டி ருந்த சிறிய ரக வான் ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளையே விபத்து இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக எவருக்கும் எந்த வொரு உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக் கப்பட்டது.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# '22'இற்கு சு.க. ஆதரவு

கொழும்பு, ஒக். 21

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற 22ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், 22ஆவது திருத்தத் திற்கு வாக்களிப்பது அரசாங்கத்தை பலப்படுத்துவதற் காக அல்ல என கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அரசாங் கத்தை பலப்படுத்தவே நாங்கள் 22ஆவது திருத்தத் துக்கு வாக்களிக்கிறோம் என்று சிலர் கூறலாம். மக்கள் தரப்பில் முற்போக்கான திருத்தம் என்பதாலேயே நாங் கள் திருத்தத்துக்கு வாக்களிக்கிறோம்.

அரசியலமைப்பு திருத்தங்களை நிறைவேற்றுவதன் மூலம் மாத்திரம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைக ளுக்கு தீர்வு காணப்படாது.

எனவே, உரம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிக ரிப்பு தொடர்பான பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் கூறினார். (அ)




# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை; உதவுவதற்கு பிரிட்டன் தயார்

கொழும்பு, ஒக். 21

ஈஸ்டர் தாக்குதல் குறித்த விசாரணைகளிற்கு உதவு வதற்கு தயாராக உள்ளதாக பிரித்தானியா தெரி வித்துள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பிரித்தானிய இராஜாங்க அமைச்சர் டொம் டுஜென்ஹட் இதனை தெரிவித்துள்ளார்.

விசாரணைகளிற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் -அந்த வேண்டுகோள் பொருத்த மானதாக சட்டபூர்வமானதாக அவசியமானதாக காணப்பட்டால் அதனை பரிசீலிக்க தயார் என அவர் கூறியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்த உரிய விசாரணைகள் இடம்பெறாததால் இந்த விடயத்திற்கு இன்னமும் உரிய தீர்வு காணப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்திருந்தார் என் பது குறிப்பிடத்தக்கது. (அ)

# புனர்வாழ்வு பணியகம் அரசமைப்பிற்கு முரண்!

கொழும்பு, ஒக். 21

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் அரசியலமைப் புக்கு முரணானது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் அறிவித் துள்ளார்.

புனர்வாழ்வு பணியகச் சட்டமூலம் நிறைவேற்றப் பட வேண்டுமானால் பாராளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை அவசியமாகும். அல்லது சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்லவேண்டும். சட்டமூலத்தில் உள்ள சில சரத்துக்களை திருத்தி நிறைவேற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## அமெரிக்காவில் இருந்து

# பிரதமர் பதவியை குறிவைக்கும் பஸில்

கொழும்பு, ஒக். 21

தற்போது அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நவம்பர் மாதம் இலங்கை திரும்புவார் என்றும், விரைவில் பிரதமராக பதவியேற்பார் என்றும் அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் பெற் றுள்ள பொதுஜன பெரமுனவுக்கே பிரதமர் பதவி வழங்கப்படவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பஸில் ராஜபக்ஷவிடம் இந்தக் கோரிக் கையை ஏற்கனவே முன்வைத்துள்ளனர்.

எனினும் அமைச்சரவையில் அவ்வாறான கலந்து ரையாடல் இடம்பெறவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன அண்மை யில் தெரிவித்திருந்தார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.